**கால்நடை பராமரிப்பு, பால்வளம்,**
**மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை**

# பால்வளம்

**கொள்கை விளக்கக் குறிப்பு**
**2022–2023**

**மானியக் கோரிக்கை எண்.௪**

**சா.மு. நாசர்**
பால்வளத் துறை அமைச்சர்

©
**தமிழ்நாடு அரசு**
**2022**

# பொருளடக்கம்


| வ. எண். | பொருள் | ப. எண். |
|---|---|---|
| 1. | அறிமுக உரை | 1 |
| 2. | பால்வளத்துறை | 5 |
| 3. | தொடக்க பால் கூட்டுறவு சங்கங்கள் | 20 |
| 4. | மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் | 29 |
| 5. | தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் | 37 |
| 6. | கால்நடை வளங்கள் | 54 |
| 7. | பால் கொள்முதல் | 56 |
| 8. | பால் விற்பனை | 59 |
| 9. | தரக்கட்டுப்பாடு நடவடிக்கைகள் | 78 |
| 10. | மாநில / ஒன்றிய அரசு நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் பால்பண்ணை வளர்ச்சி திட்டங்கள் | 83 |
| 11. | முக்கிய உட்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்பங்களை சார்ந்த திட்டங்கள் | 94 |

| வ. எண். | பொருள் | ப. எண். |
|---|---|---|
| 12. | ஒன்றியங்கள் மற்றும் இணையத்தின் விற்பனை வருவாய் | 99 |
| 13. | பல்வேறு அரசுத்துறைகளுடனான ஒருங்கிணைப்பு | 100 |
| 14. | பணியாளர் நலன் சார்ந்த நடவடிக்கைகள் | 100 |
| 15. | பால் உற்பத்தியாளர்களுக்கு அளிக்கப்படும் சேவைகள் | 106 |
| 16. | பால்வளத்துறையின் எதிர்காலத் திட்டங்கள் | 116 |
| 17. | பால் கூட்டுறவு அமைப்புகளுக்கான தேர்தல் | 132 |
| 18. | முன்னேற்ற நடவடிக்கைகள் | 136 |
| 19. | நிதி ஒதுக்கீடு | 139 |
| 20. | முடிவுரை | 140 |


# பால்வளத்துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு 2022-2023

## 1. அறிமுக உரை

பால் உற்பத்தியில் உலகளவில் 20.17 சதவீத பங்களிப்பை வழங்கி இந்தியா முதலிடத்தில் உள்ளது. இந்தியாவில் பால்பண்ணைத் தொழில், கடந்த பல ஆண்டுகளாக கணிசமாக வளர்ச்சியடைந்து நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியின் முக்கிய உந்துதலாக உருவெடுத்துள்ளது. பால் உற்பத்தியில் 2019-2020 ஆம் ஆண்டில் இந்தியா 198.44 மில்லியன் டன் வருடாந்திர உற்பத்தி வளர்ச்சியை எட்டியுள்ளது. 2019-20 ஆம் ஆண்டில் இந்தியாவில் தனிநபருக்கு கிடைக்கும் பால் அளவு நாளொன்றுக்கு 406 கிராம் என்ற அளவில் இருந்துள்ளது.

20-வது கால்நடை கணக்கெடுப்பின்படி, இந்தியா 193.46 மில்லியன் பசுக்கள்

மற்றும் 109.85 மில்லியன் எருமைகளின் எண்ணிக்கையுடன், 536.76 மில்லியன் கால்நடைகளை இருப்பில் கொண்டுள்ளது.

கால்நடை வளர்ப்பு, பால் பண்ணை மற்றும் மீன்வளம் ஆகிய துறைகள் உயர் வளர்ச்சி துறைகளாக படிப்படியாக வளர்ந்து வருகின்றன. வேளாண்மை சார்ந்த பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு பால் உற்பத்தி தொழில் வருடம் முழுவதும் கணிசமான வேலை வாய்ப்பினை வழங்கி வருகிறது. இதன் மூலம் எட்டு கோடிக்கும் மேற்பட்ட விவசாயிகள் நேரடியாகப் பயனடைகின்றனர்.

தேசியப் பொருளாதாரத்தில் 5 சதவீத மதிப்பிற்கு தனது பங்களிப்பை வழங்கும் தனித்தன்மை கொண்ட வேளாண் பொருளாக பால் விளங்குகிறது. இலட்சக்கணக்கான கிராமப்புற குடும்பங்களுக்கு இரண்டாம் நிலை வருமான ஆதாரமாக பால் பண்ணை தொழில் மாறியுள்ளது. மேலும், முக்கியமாக பெண்கள் மற்றும் குறு விவசாயிகளுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கித்



தருவதோடு, வருமானம் ஈட்டித் தரும் வாய்ப்புகளை உருவாக்கித் தருவதில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

நாட்டின் கிராமப்புற குடும்பங்களின் சமூக–பொருளாதார மேம்பாடு அடைவதிலும் பால் பண்ணை தொழில் முக்கிய பங்கு வகிக்கிறது. நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பாலில் பெரும் பங்கு சிறு, குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற தொழிலாளர்களால் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவில் பெரும்பான்மையான விவசாயிகள் சிறு, குறு விவசாயிகளாக இருப்பது, பால் பண்ணை தொழிலை மேற்கொள்ள ஊக்குவிக்கும் ஒரு காரணியாக அமைகிறது.

பால் பண்ணை தொழிலில் ஆண்டு முழுவதும் வருமானத்திற்கு வகை செய்வதோடு கிராமப்புறத்தில் பெருமளவில் வேலை வாய்பை உருவாக்குகிறது. ஆனால், குறிப்பிட்ட காலகட்டங்களில் மட்டுமே வேளாண் தொழிலில் வருமானம் கிடைக்கும். இந்தியாவில் மக்கள் தொகை பெருக்கம், நகரமயமாக்கல், தனிநபர்

வருமானம் அதிகரிப்பு மற்றும் ஊட்டச்சத்து விழிப்புணர்வு ஆகியன பால் தேவைக்கான காரணிகள் ஆகும். ஆகையினால், பால்பண்ணைத் தொழில் நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு ஒரு முக்கிய காரணியாக விளங்குகிறது.

கொரோனா நோய்த் தொற்றின்போது பல்வேறு தொழில்களும் முடங்கிய நேர்வில், பால் உற்பத்தித் தொழில் தொடர்ந்து நடைபெற்று விவசாயிகளுக்கு வருமானம் மற்றும் வாழ்வாதாரத்தினை வழங்கியது.

**1.1 தமிழ்நாட்டில் பால் பண்ணை வளர்ச்சி**

2019-20 ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி பால் உற்பத்தியில் தமிழ்நாடு இந்திய அளவில் 11வது இடம் வகிக்கிறது. தமிழ்நாட்டின் பால் உற்பத்தி 8.76 மில்லியன் டன்கள் ஆகும். தமிழ்நாட்டில் தனிநபருக்கு கிடைக்கும் பால் அளவு நாளொன்றுக்கு 316 கிராம் என்ற அளவில் உள்ளது. தமிழ்நாட்டின் பால் உற்பத்தியின்



வளர்ச்சி விகிதம் 4.75 சதவீதம் என்ற அளவில் வளர்ச்சி அடைந்து வருகிறது.

20-வது கால்நடை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில், 24.5 மில்லியன் எண்ணிக்கையில் உள்ள மொத்த கால்நடைகளில், 9.52 மில்லியன் பசுக்கள் மற்றும் 0.52 மில்லியன் எருமைகள் உள்ளன.

**2. பால்வளத்துறை**

தமிழ்நாட்டில் 1958 ஆம் ஆண்டு பால்வளத் துறை துவக்கப்பட்டது. பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர் / இயக்குநர், இத்துறையின் தலைவராக செயல்படுவதுடன் தமிழ் நாட்டில் உள்ள அனைத்து பால் கூட்டுறவு சங்கங்களின் செயல் பதிவாளராகவும் செயல்படுகிறார். கூட்டுறவுத் துறையில் இருந்து வந்த அனைத்து பால் கூட்டுறவு சங்கங்களின் மீதான சட்டப் பூர்வ மற்றும் நிர்வாக கட்டுப்பாடுகள், 01.08.1965 அன்று முதல் பால்வளத் துறைக்கு மாற்றப்பட்டன.

பின்னர், 1972 ஆம் ஆண்டில் இத்துறையின் வணிக நடவடிக்கைகள் அனைத்தும், கம்பெனி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட, தமிழ்நாடு பால்வள நிறுவனத்திற்கு மாற்றப்பட்டன. மேலும், 1981 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மூன்றடுக்கு பால் கூட்டுறவு முறை உருவாக்கப்பட்ட போது, தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் நடவடிக்கைகள் அனைத்தும் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்திற்கு மாற்றப்பட்டன.

பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர் / இயக்குநர் அவர்கள், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் நிர்வாக இயக்குநராகவும் செயல்பட்டு வந்த நிலையில் கடந்த ஜனவரி 2022–ஆம் ஆண்டு அரசின் கொள்கை முடிவாக பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறைக்கென தனி ஆணையர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.




2021–22 ஆம் ஆண்டில் 9,376 பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலம் நாளொன்றுக்கு சராசரியாக 38.26 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கூட்டுறவு அமைப்புகள் மூலம் பால் கொள்முதலில் ஆவின் நிறுவனம் இந்திய அளவில் மூன்றாம் இடம் வகிக்கின்றது.

## 2.1 தமிழ்நாட்டில் பால் கூட்டுறவு அமைப்புகள்

தமிழ்நாட்டில் மூன்றடுக்கு பால் கூட்டுறவு முறை பின்பற்றப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள பால் கூட்டுறவு சங்கங்கள் அனைத்தும் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளின் கீழ் பதியப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

**மூன்று அடுக்கு பால் கூட்டுறவு அமைப்பு**






**அடுக்கு–1–கிராம அளவில்**

கிராம அளவில் செயல்படும் தொடக்க பால் கூட்டுறவு சங்கங்கள் மூன்றடுக்கு பால் கூட்டுறவு அமைப்புகளின் அடித்தளமாக செயல்படுகின்றன. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க விவகார எல்லைக்குள் வசிக்கும் பால் உற்பத்தியாளர்கள், சங்கத்தின் பங்குத் தொகையினை செலுத்துதல் மூலமாக சங்க உறுப்பினராகலாம். உறுப்பினர் பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பாலை கொள்முதல் செய்து உள்ளூர் தேவைக்காக ஒரு பகுதியை விற்பனை செய்த பிறகு எஞ்சிய பாலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு வழங்கி வருகின்றன.

**அடுக்கு–2– மாவட்ட அளவில்**

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களானது, மாவட்ட அளவிலான கூட்டுறவு சங்கங்கள் ஆகும். அதன் விவகார எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள தொடக்க பால்

உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், இதில் உறுப்பினர்களாக உள்ளன. அந்த உறுப்புச் சங்கங்களிலிருந்து பாலை கொள்முதல் செய்து, பதப்படுத்தி நுகர்வோர்களுக்கு விற்பனை செய்கிறார்கள். மேலும் உபரியாக உள்ள பால், பால்பவுடராகவும், பால் பொருட்களாகவும் உருமாற்றம் செய்யப்படுகின்றன.

**அடுக்கு–3–மாநில அளவில்**

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் என்பது மாநில அளவிலான தலைமை பால் கூட்டுறவு சங்கமாகும். இதில் அனைத்து மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களும் உறுப்பினர்களாக உள்ளனர். இணையமானது, மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களிலிருந்து பாலை கொள்முதல் செய்து, பதப்படுத்தி பால் மற்றும் பால் பொருட்களை சென்னை பெருநகர பால் நுகர்வோர்களுக்கு 'ஆவின்' என்ற வணிக முத்திரையுடன் விற்பனை செய்து வருகிறது.



## 2.2 பால்வளத்துறையின் நிர்வாக அமைப்பு


தலைமை செயலகத்தின் கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் பால்வளத்துறையின், துறைத் தலைவராக, பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர்/இயக்குநர் அவர்கள் செயல்பட்டு வருகிறார். பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர்/இயக்குநர் அவர்கள் தலைமையில் சென்னை மாதவரம் பால் பண்ணையில் பால்வளத்துறையின் தலைமை அலுவலகம் இயங்கி வருகிறது.

மேலும் மாவட்ட அளவில் சரகங்களில் 29 துணைப்பதிவாளர் (பால்வளம்) அலுவலகங்கள் செயல்பாட்டில் உள்ளன. 2020–ஆம் ஆண்டு முதல் மதுரையில் மண்டல துணைப் பால் ஆணையர் அலுவலகம் ஒன்று தொடங்கப்பட்டு இயங்கி வருகின்றது. பால்வளத்துறை ஆணையர் அவர்களுக்கு அலுவலக பணிகளில் உதவிட, தலைமை அலுவலகத்தில் ஒரு கூடுதல் பால்

ஆணையர், ஒரு துணைப் பதிவாளர் (தலைமையகம்) மற்றும் ஒரு துணைப் பதிவாளர் (சட்டப்பணிகள்) பணியாற்றி வருகின்றனர். இத்துறைக்கென களப் பணியாளர்கள் உள்ளிட்ட 800 பணியாளர்கள் கொண்ட பணிநிலை திறன் அனுமதிக்கப் பட்டுள்ளது.



### பால்வளத்துறையின் நிர்வாக அமைப்பு



## 2.3 பால்வளத்துறையின் செயல்பாடுகள்

பால் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் என்ற முறையில் பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர் அவர்களுக்கு 1983 ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகள் 1988–ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள்:

- ➢ புதிய பால் கூட்டுறவு சங்கங்களை பதிவு செய்தல்
- ➢ செயலிழந்த சங்கங்களை புதுப்பித்தல்
- ➢ பால் கூட்டுறவு சங்கங்களை ஆய்வு செய்தல், தகராறுகளை தீர்த்தல்
- ➢ சங்கங்களின் நிர்வாகத்திற்கு நிர்வாகக்குழுவை தேர்ந்தெடுக்க தேர்தல் நடத்துதல்
- ➢ பொது மக்கள் நலன் கருதி உரிய அறிவுரைகள் வழங்குதல், ஆய்வுக்குறைகள், தணிக்கை குறைகள் தொடர்பான சட்டப்பூர்வ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்



அதிகாரப் பரவலாக்கத்தின் ஒரு பகுதியாக, பதிவாளர் அவர்களின் சில அதிகாரங்கள் துணைப்பால் ஆணையர் (கூட்டுறவு) மற்றும் துணைப்பதிவாளர் (பால்வளம்) ஆகியோருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

உணவுப் பாதுகாப்பு சட்டம் 2006 மற்றும் விதிகள் 2011 நடைமுறைப்படுத்தும் முன்னர், பால் மற்றும் பால் பொருட்கள் ஆணை 1992–ன் படி பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர்/இயக்குநர், மாநில பதிவாளர் ஆக அதிகாரப்படுத்தப்பட்டிருந்தார். எனினும் உணவுப் பாதுகாப்பு சட்டம் 2006 மற்றும் விதிகள் 2011 நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர், மேற்படி அதிகாரம் உணவுப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும், உணவுப் பாதுகாப்பு சட்டம் 2006 மற்றும் விதிகள் 2011ன் கீழ், நுகர்வோருக்கு தரமான பால் வழங்கப்படுவதை கண்காணித்து உறுதி செய்ய

நியமிக்கப்பட்ட மாநில கண்காணிப்பு குழுவின் உறுப்பினராக, பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர்/இயக்குநர் செயல்பட்டு வருகிறார்.

**2.4 குறிக்கோள்கள்**

1. பால் உற்பத்தியாளர்கள் வழங்கும் பாலுக்கு நியாயமான விலை வழங்கப்படுவதை உறுதி செய்தல்.
2. நுகர்வோர்களுக்கு நியாயமான விலையில், இந்திய உணவு பாதுகாப்பு தர ஆணைய வழிகாட்டுதலின்படி சுகாதாரமான மற்றும் தூய்மையான பதப்படுத்தப்பட்ட பால் வழங்கப்படுவதையும் உறுதி செய்தல்.
3. பால் கூட்டுறவு கட்டமைப்பின் மீது நம்பகத்தன்மையை ஏற்படுத்துவதை நிர்வாக வெளிப்படைத் தன்மை மூலம் உறுதி செய்தல்.
4. ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்புக்குள் இல்லாத பால் பண்ணைகளை



ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்புக்குள் கொண்டு வருதல்.

5. இதர தொழில்துறை வளர்ச்சிக்கு ஈடாக பால்பண்ணைத் துறையும் சீரான வளர்ச்சி அடைவதை உறுதி செய்தல்.
6. கால்நடைகளுக்கு தேவையான ஊட்டச் சத்து மற்றும் தீவனம் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்ய போதிய முயற்சிகள் மேற்கொள்ளுதல்.
7. பால் உற்பத்தியாளர்கள் அளவில், சங்கங்கள் அளவில், மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் இணைய அளவில் பல்வேறு பால் பண்ணை நடவடிக்கைகளில் சமீபத்திய புதிய தொழில் நுட்பங்களை அறிமுகப் படுத்துதல் மற்றும் புதுப்பித்தல்.
8. தமிழ்நாட்டில் பால் உற்பத்தியில் இரண்டாம் வெண்மைப்புரட்சியினை ஏற்படுத்துதல்.

### 2.4.1 உத்திகள் / புதிய வழிமுறைகள் / வழிகாட்டுதல்கள்/ யோசனைகள்

பால்வளத்துறையின் குறிக்கோள்களை நிறைவேற்ற பின்வரும் உத்திகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

1. பால் உற்பத்தி செலவினைக் கருத்தில் கொண்டு, பால் கொள்முதல் விலையினை அவ்வப்போது மாற்றியமைப்பதன் மூலம் பால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான கொள்முதல் விலை வழங்கப்படுவது உறுதிசெய்யப்படுகிறது.

2. பதப்படுத்தப்பட்ட பாலின் விற்பனை விலையினை அவ்வப்போது மாற்றியமைப்பதன் மூலம், நுகர்வோர்களுக்கு நியாயமான விற்பனை விலையில் பால் வழங்கப்படுவது உறுதிசெய்யப்படுகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களின் ஆணைப்படி, 16.05.2021 முதல் அனைத்து வகைப் பாலுக்குமான விற்பனை



விலையானது லிட்டருக்கு ரூ.3/– குறைக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.

3. பால் கூட்டுறவு சங்கங்களுக்கான நிர்வாகக்குழு தேர்தல் உரிய காலகட்டங்களில் நடத்தப்படுகிறது.

4. உணவு பாதுகாப்பு சட்டம் 2006 மற்றும் விதிகள் 2011ன் வழிகாட்டுதல்களை அனைத்து பால் கூட்டுறவுகளிலும் செயல்படுத்துதல்.

5. கூட்டுறவு அமைப்பின் கீழ் அதிக எண்ணிக்கையில் பால் உற்பத்தியாளர்களை கொண்டு வருதல், அனைத்து கிராமங்களையும் உள்ளடக்கி பால் கூட்டுறவு சங்கங்கள் அமைத்தல் மற்றும் செயலிழந்த சங்கங்களை செயல்படும் சங்கங்களாக மறுமலர்ச்சி செய்தல்.

6. பால் கூட்டுறவு சங்கப் பணியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு பால் தொழிலில் திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தல்.

7. அனைத்து பால் கூட்டுறவுகளிலும் ஒருங்கிணைந்த பால் பண்ணை மேலாண்மை அமைப்பை ஏற்படுத்துதல்.

8. பால் விற்பனையினை அதிகரித்தல்.

## 3. தொடக்க பால் கூட்டுறவு சங்கங்கள்

முன்னர், பிரதம பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள் கிராமப்புறங்களில் உபரிப்பாலினை கொள்முதல் செய்து அப்பாலினை பிற கிராமங்களில் விற்பனை செய்து வந்தன. தற்போது பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்களானது கிராமப்புறங்களில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களாகவும், நகர்ப்புறங்களில் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களாகவும் மாற்றப்பட்டுள்ளன.



## 3.1. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள்

### 3.1.1. கட்டமைப்பு மற்றும் செயல்பாட்டு அம்சங்கள்

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், கிராம அளவில் உறுப்பினர்கள் உற்பத்தி செய்யும் பாலை சேகரித்து, அதில் சிறிய பகுதியை உள்ளூரில் விற்பனை செய்தது போக, எஞ்சிய பாலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு அனுப்பி வைக்கின்றன.

சங்கத்தின் செயல்பாட்டு பகுதிகளில் உள்ள பால் உற்பத்தியாளர்கள், தொடக்க கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களில் உறுப்பினர்களாக சேர தகுதியுடையவர்கள்.

அனைத்து தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களும் தேர்தல் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவினால் நிர்வகிக்கப்பட்டு வருகிறன.

சாத்தியக்கூறு உள்ள இடங்களில் பிரத்தியேகமாக மகளிர் பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் ஆதி திராவிடர் பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கங்களும் பதிவு செய்யப்படுகின்றன.

சங்கத்தில் பால் உற்பத்தி செய்யும் உறுப்பினர்களின் கால்நடைகளுக்கு, மருத்துவ வசதிகளை ஏற்பாடு செய்யப்படுவதோடு, கால்நடை தீவனம் மற்றும் பிற உள்ளீடுகளையும் பெற்று வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

தற்சமயம், கிராம அளவில் 9,376 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் செயல்பாட்டில் உள்ளன.

### 3.1.2 புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் அமைத்தல்

புதிய பால் கூட்டுறவு சங்கத்தை பதிவு செய்வதற்காக, பதிவு செய்ய உத்தேசிக்கப்பட்ட கிராமத்தில் சங்கத்தில் உறுப்பினராக சேர்க்க,



குறிப்பிட்ட கிராமத்தில் வசிக்கும் 18 வயது பூர்த்தியான குறைந்தபட்சம் 25 பால் உற்பத்தி செய்யும் தகுதிவாய்ந்த குடிமக்கள், பால் கூட்டுறவு சங்கத்தை பதிவு செய்ய கோரி சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் துணைப்பதிவாளர் (பால்வளம்) அவர்களுக்கு விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

முதுநிலை ஆய்வாளர்கள் (பால்) அல்லது மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் விரிவாக்க அதிகாரிகள் கள ஆய்வை மேற்கொண்டு, கறவைகளின் எண்ணிக்கை, அப்பகுதியில் உள்ள பால் உற்பத்தித் திறன், நம்பகத்தன்மை, பால் வழித்தடம் அமையும் தன்மை, இலாபம், பாலின் தரம் மற்றும் பால் வழித்தட பயண நேரம் ஆகியன குறித்து ஆய்வு செய்வார்கள்.

மேலும், முன்மொழியப்பட்ட சங்கத்தின் விவகார எல்லை மற்றொரு பதிவு செய்யப்பட்ட பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கத்தின் செயல்பாட்டு எல்லையுடன் சேர்ந்து இருக்கக்

கூடாது. அவ்வாறு உத்தேசிக்கப்பட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க விவகார எல்லை வேறொரு பதிவு செய்யப்பட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க விவகார எல்லைக்குள் இருக்கும் நேர்வில் அப்பதிவு செய்யப்பட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்திடமிருந்து தடையில்லா சான்று பெறப்பட்ட பின்னரே உத்தேசிக்கப்பட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் பதிவு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சங்கம் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முதன்மை அமைப்பாளர் ஒருவர் நியமிக்கப் படுவார். மேலும் உறுப்பினர்கள் அப்பகுதியை சார்ந்தவர்கள் என்பதற்கான குடியிருப்புக்கான ஆதாரம், உள்ளூர் கூட்டுறவு வங்கியிடமிருந்து கடன் நிலுவையின்மைச் சான்று உள்ளிட்ட முழு வடிவத்திலும் முன்மொழிவை சமர்ப்பிக்க வேண்டும்.



அத்தகைய முன்மொழிவு கிடைத்ததும், முன்மொழிவு பெறப்பட்ட நாளிலிருந்து 120 நாட்களுக்குள் துணைப்பதிவாளர் (பால்வளம்) சங்கத்தை பதிவு செய்வார். எந்தவொரு குறைபாடுகளையும் சுட்டிக்காட்டி முன்மொழிவு துணைப்பதிவாளர் (பால்வளம்) அவர்களால் 120 நாட்கள் கால எல்லைக்குள் திருப்பித் தரப்படா விட்டால், அது பதிவு செய்யப்படவில்லை என்றாலும், 120 நாட்கள் கால வரம்பின் கடைசி தேதியில் அத்தகைய சங்கம் பதிவு செய்யப்பட்டதாக கருதப்படும்.

**<u>ஒன்றியம் வாரியாக சங்கங்கள் மற்றும் கறவை மாடுகள் விவரங்கள் (31.03.2022)</u>**

| வ எண் | மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் பெயர் | செயல்படும் சங்கங்களின் எண்ணிக்கை | செயலற்ற சங்கங்களின் எண்ணிக்கை | கூட்டுறவு அமைப்பில் கறவை மாடுகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம்<br>திருவள்ளூர் | 480 | 108 | 0.58 |
| 2 | விழுப்புரம் | 592 | 21 | 1.48 |
| 3 | கடலூர் | 185 | 40 | 0.18 |
| 4 | வேலூர் | 326 | 45 | 1.28 |

| வ எண் | மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் பெயர் | செயல்படும் சங்கங்களின் எண்ணிக்கை | செயலற்ற சங்கங்களின் எண்ணிக்கை | கூட்டுறவு அமைப்பில் கறவை மாடுகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 5 | திருவண்ணாமலை | 611 | 85 | 1.78 |
| 6 | கிருஷ்ணகிரி | 234 | 38 | 0.32 |
| 7 | தர்மபுரி | 266 | 26 | 0.55 |
| 8 | சேலம் | 776 | 18 | 1.85 |
| 9 | நாமக்கல் | 510 | 25 | 0.53 |
| 10 | ஈரோடு | 514 | 17 | 0.73 |
| 11 | திருப்பூர் | 439 | 38 | 0.56 |
| 12 | கோயம்புத்தூர் | 348 | 40 | 1.09 |
| 13 | நீலகிரி | 89 | 5 | 0.24 |
| 14 | மதுரை | 728 | 128 | 0.5 |
| 15 | தேனி | 499 | 70 | 0.24 |
| 16 | திண்டுக்கல் | 190 | 43 | 0.29 |
| 17 | திருச்சி | 613 | 69 | 2.33 |
| 18 | கரூர் | 156 | 20 | 0.46 |
| 19 | தஞ்சாவூர் | 387 | 61 | 0.46 |
| 20 | புதுக்கோட்டை | 346 | 84 | 0.24 |
| 21 | சிவகங்கை | 504 | 90 | 0.25 |
| 22 | விருதுநகர் | 116 | 24 | 0.12 |
| 23 | திருநெல்வேலி | 238 | 21 | 0.37 |
| 24 | தூத்துக்குடி | 177 | 46 | 0.17 |
| 25 | கன்னியாகுமரி | 52 | 2 | 0.12 |
| | **மொத்தம்** | **9,376** | **1,164** | **16.72** |



### 3.1.3. செயலிழந்த சங்கங்களை மறுமலர்ச்சி செய்ய மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள்

தமிழகத்தில், 31.01.2022 அன்றய தேதியில் 1,164 செயலிழந்த பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. இரண்டு ஆண்டுகளுக்குள் செயலிழந்த நிலையில் இருக்கும் பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கங்களை புதுப்பிக்கவும், இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக செயலற்ற நிலையில் உள்ள சங்கங்களுக்கு மாற்றாக அதே பகுதியில் புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களை பதிவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி கடந்த ஓராண்டில் மட்டும் 92 செயலற்ற சங்கங்கள் புதுப்பிக்கப் பட்டுள்ளன.

### 3.2. தொடக்க பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள்

பால் நுகர்வோர்களுக்கு பாலை விற்பனை செய்யவும் அவர்களது நலனைப் பாதுகாப்பதற்காகவும் பால் நுகர்வோர் கூட்டுறவு

சங்கங்கள் உருவாக்கப்படுகின்றன. கிராமங்களில் மட்டுமல்லாது, பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் இல்லாத சென்னை பெருநகரத்திலும், நகர்ப்புறப் பகுதிகளிலும் பால் நுகர்வோருக்கு ஏற்படும் பால் தேவையை கருத்தில் கொண்டு தொடக்க பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. இதன் மூலம் நகரத்தில் வாழும் பொதுமக்களுக்கு பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக சலுகை விலையில் பால் அட்டை வழங்கி பால் விநியோகம் செய்யப்படுகிறது.

மாநிலம் முழுவதும் சுமார் 58 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 48 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள புறநகர் பகுதிகளில் உள்ளன. இவை பால் நுகர்வோர்களுக்கு இணையத்தின் மூலமாக விற்பனை செய்யப்படும் 13.36 இலட்சம் லிட்டர் பாலில், நாளொன்றிற்கு சராசரியாக 2.84 இலட்சம் லிட்டர் பாலினை பால் அட்டைகள் மூலம் விற்பனை செய்கின்றன. இது தவிர, சென்னை



மற்றும் அதைச் சுற்றியுள்ள பால் நுகர்வோர் சங்கங்கள், மாதத்திற்கு ரூ.40 இலட்சம் மதிப்புள்ள பால் உபபொருட்களை நுகர்வோருக்கு விற்பனை செய்ய இணையத்திற்கு உதவுகின்றன.

பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகமும் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவால் நிர்வகிக்கப்படுகிறது.

### 4. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள்

தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1983ன்படி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியமானது மூன்றடுக்கு முறையில் இயங்கும் நடு அடுக்கு அளவிலான ஒரு கூட்டுறவு அமைப்பாகும். மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் அதிகார வரம்புக்கு உட்பட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட கூட்டுறவு பால்

உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் உறுப்பினர்கள் ஆவார்கள்.

தற்போது 25 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்தகைய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் தமிழ்நாட்டில் சென்னை மாவட்டத்தைத் தவிர அனைத்து வருவாய் மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக உள்ளன. அனைத்து கூட்டுறவு நிறுவனங்களையும் போலவே, மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களும் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவால் நிர்வகிக்கப்படுகின்றன. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் பொது மேலாளர், நிர்வாகத்தின் செயல் அலுவலராக உள்ளார்.



### 4.1. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் செயல்பாடுகள்

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள், விவகார எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள உறுப்பினர் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களிலிருந்து பாலை கொள்முதல் செய்து, பதப்படுத்தி நுகர்வோர்களுக்கு விற்பனை செய்கின்றன. மேலும் உபரியாக உள்ள பால், பால்பவுடராகவும், பால் பொருட்களாகவும் உருமாற்றம் செய்யப்படுகின்றன.

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து தாங்கள் கொள்முதல் செய்யும் பாலிற்கு தரத்தின் அடிப்படையில் அரசு நிர்ணயித்த கொள்முதல் விலையை குறிப்பிட்ட கால இடைவெளிகளில் (வாரம் ஒரு முறை, 10 நாட்களுக்கு ஒரு முறை) வழங்குகின்றன.

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து பாலை பெறுவதற்கு பால் வழித்தடங்களை அமைத்தல், வாகனங்களை ஏற்பாடு செய்தல் பாலை அருகிலுள்ள மொத்த பால் குளிர்விப்பான் / குளிரூட்டும் நிலையம் /பால் பண்ணைக்கு கொண்டு சென்று பதப்படுத்துதல் ஆகியவற்றை மேற்கொண்டு பின்னர் நுகர்வோருக்கு விற்பனை செய்கின்றன.

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் பதப்படுத்தப்பட்ட பால் விற்பனை மற்றும் பால் பொருட்கள் தயாரிப்பு உற்பத்திக்கான தங்கள் சொந்த தேவையை பூர்த்தி செய்த பின்னர் உபரிப்பாலை விற்பனை செய்வதற்காக சென்னையில் உள்ள இணைய பால் பண்ணைகளுக்கு அவரவர்களின் தேவைக்கு ஏற்ப அனுப்பி வைக்கின்றன.

மேலும் உபரிப்பாலின் ஒரு பகுதி வெண்ணெய் மற்றும் பால் பவுடராக மாற்றப்படுவதற்காக மதுரை, ஈரோடு, சேலம்,



கிருஷ்ணகிரி போன்ற சமன்படுத்தும் பால் பண்ணைகள் மற்றும் திருவண்ணாமலை இணைய பால் பண்ணை ஆகிய இடங்களுக்கு அனுப்பப்படுகிறது.

ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்துவதிலும் மற்றும் செயல்படுத்தும் முகமையாக செயல்படுவதிலும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

மேலும், தாங்கள் ஈட்டிய இலாபத்தை பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கங்களுக்கு அவர்களால் வழங்கப்பட்ட பாலின் அளவிற்கு ஏற்ப ஊக்கத்தொகையாக வழங்கி பகிர்ந்து கொள்கின்றன.

| வ.எண் | ஒன்றியத்தின் பெயர் | பால் பண்ணைகளில் பால் பதப்படுத்தும் திறன் | | குளிரூட்டும் திறன் (நாளொன்றுக்கு சராசரி லிட்டரில்) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண் | கையாளும் அளவு | குளிர்விப்பு மையம் | | மொத்த பால் குளிர்விப்பு மையம் | | மொத்தம் |
| | | | | எண் | கையாளும் அளவு | எண் | கையாளும் அளவு | |
| 1 | காஞ்சிபுரம் – திருவள்ளூர் | 1 | 1,00,000 | 2 | 60,000 | 25 | 55,000 | 2,15,000 |
| 2 | விழுப்புரம் | 1 | 1,00,000 | 1 | 1,00,000 | 33 | 77,000 | 2,77,000 |
| 3 | கடலூர் | 0 | 0 | 1 | 10,000 | 10 | 44,000 | 54,000 |
| 4 | வேலூர் | 1 | 1,50,000 | 2 | 80,000 | 36 | 1,21,500 | 3,51,500 |
| 5 | திருவண்ணா மலை | 0 | 0 | 2 | 1,50,000 | 77 | 2,30,500 | 3,80,500 |
| 6 | தர்மபுரி | 0 | 0 | 1 | 50,000 | 33 | 1,23,000 | 1,73,000 |
| 7 | கிருஷ்ணகிரி | 1 | 2,00,000 | 1 | 10,000 | 7 | 31,000 | 2,41,000 |
| 8 | சேலம் | 1 | 5,00,000 | 1 | 1,30,000 | 78 | 2,87,500 | 9,17,500 |
| 9 | நாமக்கல் | 0 | 0 | 2 | 1,00,000 | 22 | 53,000 | 1,53,000 |
| 10 | ஈரோடு | 1 | 3,00,000 | 2 | 35,000 | 53 | 2,49,000 | 5,84,000 |
| 11 | கோயம்புத்தூர் | 1 | 5,00,000 | 3 | 1,20,000 | 17 | 82,000 | 7,02,000 |
| 12 | திருப்பூர் | 0 | 0 | 2 | 1,10,000 | 40 | 1,95,000 | 3,05,000 |
| 13 | நீலகிரி | 1 | 50,000 | 1 | 10,000 | 6 | 11,000 | 71,000 |
| 14 | மதுரை | 1 | 5,00,000 | 0 | 0 | 63 | 1,33,000 | 6,33,000 |
| 15 | தேனி | 0 | 0 | 1 | 1,00,000 | 2 | 7,000 | 1,07,000 |
| 16 | திண்டுக்கல் | 1 | 30,000 | 2 | 40,000 | 23 | 80,000 | 1,50,000 |
| 17 | திருச்சி | 1 | 1,50,000 | 2 | 1,50,000 | 44 | 1,94,000 | 4,94,000 |
| | பாடாலூர் | 1 | 1,00,000 | 0 | 0 | 0 | 0 | 1,00,000 |
| 18 | கரூர் | 0 | 0 | 1 | 50,000 | 12 | 24,500 | 74,500 |
| 19 | தஞ்சாவூர் | 1 | 48,000 | 1 | 30,000 | 13 | 51,000 | 1,29,000 |
| 20 | புதுக்கோட்டை | 1 | 55,000 | 0 | 0 | 5 | 25,000 | 80,000 |
| 21 | சிவகங்கை | 1 | 50,000 | 1 | 10,000 | 14 | 58,000 | 1,18,000 |
| 22 | விருதுநகர் | 1 | 50,000 | 1 | 10,000 | 1 | 5,000 | 65,000 |
| 23 | திருநெல்வேலி | 1 | 1,00,000 | 2 | 80,000 | 3 | 15,000 | 1,95,000 |



| வ.எண் | ஒன்றியத்தின் பெயர் | பால் பண்ணைகளில் பால் பதப்படுத்தும் திறன் | | குளிரூட்டும் திறன் (நாளொன்றுக்கு சராசரி லிட்டரில்) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண் | கையாளும் அளவு | குளிர்விப்பு மையம் | | மொத்த பால் குளிர்விப்பு மையம் | | மொத்தம் |
| | | | | எண் | கையாளும் அளவு | எண் | கையாளும் அளவு | |
| 24 | தூத்துக்குடி | 0 | 0 | 2 | 20,000 | 9 | 43,000 | 63,000 |
| 25 | கன்னியாகுமரி | 1 | 30,000 | 0 | 0 | 0 | 0 | 30,000 |
| | மொத்தம் | 18 | 30,13,000 | 34 | 14,55,000 | 626 | 21,95,000 | 66,63,000 |
| | சென்னை பெருநகர பால்பண்ணைகள் (இணையம்) | | | | | | | |
| அ | மாதவரம் பால் பண்ணை | 1 | 5,00,000 | - | - | - | - | - |
| ஆ | அம்பத்தூர் பால் பண்ணை | 1 | 5,00,000 | - | - | - | - | - |
| இ | சோழிங்கநல்லூர் பால் பண்ணை | 1 | 6,00,000 | - | - | - | - | - |
| ஈ | அம்பத்தூர் பால் பொருட்கள் பண்ணை | 1 | 65,000 | - | - | - | - | - |
| உ | திருவண்ணாமலை பால் பண்ணையுடன் கூடிய பால்பவுடர் தொழிற்சாலை | 1 | 2,00,000 | - | - | - | - | - |
| | மொத்தம் | 5 | 18,65,000 | - | - | - | - | - |
| | ஆக மொத்தம் | 23 | 48,78,000 | 34 | 14,55,000 | 626 | 21,95,000 | 66,63,000 |

## 4.2. பணிநிலைத் திறன்

25 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் பணிநிலைத் திறன் எண்ணிக்கை வருமாறு :

| வ. எண் | பதவியின்பெயர் | அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பொதுமேலாளர் | 25 |
| 2 | துணை பொதுமேலாளர் | 20 |
| 3 | உதவி பொதுமேலாளர் | 88 |
| 4 | மேலாளர் | 397 |
| 5 | துணை மேலாளர் | 444 |
| 6 | விரிவாக்க அலுவலர் | 284 |
| 7 | அலுவலக ஊழியர் | 886 |
| 8 | ஓட்டுநர் | 296 |
| 9 | தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் உதவியாளர்கள் | 1853 |
| | **மொத்தம்** | **4,293** |



## 5. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம்

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம், 3 அடுக்கு வடிவத்தின் மாநில அளவிலான உயர்மட்ட உச்ச அமைப்பாகும். இதில், மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களும் உறுப்பினர்களாக உள்ளன.

தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டம் மற்றும் விதிகளின் கீழ் கூட்டுறவு சங்கமாக தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் பதிவு செய்யப்பட்டது. அப்போதைய தமிழ்நாடு பால்வள வாரியத்தினால் கையாளப்பட்ட பால் கொள்முதல், பால் மற்றும் பால் பொருட்களை நுகர்வோருக்கு வழங்குவதற்காக பதப்படுத்துதல், சிப்பங்கட்டுதல் மற்றும் விற்பனை செய்தல் போன்ற அனைத்து வணிக நடவடிக்கைகளையும் உள்ளடக்கி 01.02.1981 அன்று தொடங்கப்பட்டது. அனைத்து வணிக நடவடிக்கைகளுக்கு முன்னர்

தமிழ்நாடு பால்வள மேம்பாட்டு கழகத்தால் கையாளப்பட்டது. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணைய நிர்வாக அலுவலகம் மற்றும் இதர பிரிவு அலுவலகங்கள் தற்போது சென்னை, நந்தனத்தில் 20.06.2018 முதல் செயல்பட்டு வருகின்றது.

இணையத்தின் ஒட்டு மொத்த நிர்வாகம், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்களிலிருந்து மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவால் நிர்வகிக்கப்படுகிறது.

### 5.1. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள்

இணையமானது, மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களிடமிருந்து பாலை கொள்முதல் செய்கிறது. பால் பதப்படுத்தப்பட்டு பால் பைகளில் நிரப்பப்பட்டு சென்னை பெருநகரம் மற்றும் அதன் புறநகரப் பகுதிகளில் உள்ள நுகர்வோர்களுக்கு பால் மற்றும்



பால் பொருட்களாக விற்பனை செய்து வருகிறது. இது தவிர, மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களால் தயாரிக்கப்படும் நெய், வெண்ணெய், ஐஸ்கிரீம் உள்ளிட்ட பால் பொருட்களை மாநிலத்திற்கு உள்ளேயும், வெளியேயும் 'ஆவின்' என்ற வணிக பெயரில் விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்வதில் இணையம் முக்கிய பங்கு வகிக்கிறது.

இணையமானது, ஒன்றியங்களின் பால் கொள்முதல், பால் கையாளுதல், சந்தைப்படுத்துதல், உட்கட்டமைப்பு உருவாக்கம், தரக் கட்டுப்பாடு மற்றும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளுக்கு ஆலோசனை வழங்கி கண்காணிக்கின்றது.

சென்னை பெருநகர நுகர்வோர்களுக்கு தேவையான பாலை பதப்படுத்தவும், சிப்பங்கட்டவும், விநியோகிக்கவும் சென்னை பெருநகரத்தில், மாதவரம் பால் பண்ணை, அம்பத்தூர் மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய இடங்களில் மூன்று பால் பண்ணைகள் இணையத்தின் கட்டுப்பாட்டில்

இயங்கி வருகின்றன. மேலும், இந்த பால் பண்ணைகள் தவிர, அம்பத்தூரில் பால் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையும் உள்ளது.

திருவண்ணாமலையில் பால் மற்றும் பால் பவுடர் தொழிற்சாலை, உதகமண்டலத்தில் கருவூலக ஜெர்சி மற்றும் பொலிகாளைப் பண்ணை, ஈரோட்டில் எருமை உறை விந்து நிலையம் மற்றும் பால் கறவையின மேம்பாட்டு திட்ட அலுவலகம் ஆகியவையும் இணையத்தின் சொந்த அலகுகளாக செயல்பட்டு வருகின்றன.

இணையம், தனது சொந்த பயன்பாட்டிற்கென போக்குவரத்து பிரிவைக் கொண்டுள்ளது. இதில் பல்வேறு கொள்ளளவு கொண்ட நவீன மயமாக்கப்பட்ட சாலைவழி பால் டேங்கர்கள் பராமரிக்கப்படுகின்றன. மேலும், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களிலிருந்து தினசரி பால் சேகரிப்பதற்காக வாடகை வாகனங்களையும் இயக்குகிறது. ஜி.பி.எஸ். கருவிகள்



பொருத்தப்பட்டு அனைத்து வாகனங்களின் இயக்கமும் கண்காணிக்கப்படுகிறது.

பொது மக்களுக்கு, பால் மற்றும் பால் பொருட்களை எடுத்துச் செல்ல ஏதுவாக, இணையம் தனது சொந்த பாலி யுரேதேன் நுரை (PUF) காப்பிடப்பட்ட கொள்கலன் வாகனங்கள் மற்றும் குளிரூட்டப்பட்ட PUF காப்பிடப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்துகிறது.

### 5.2. பணிநிலைத் திறன்

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் அங்கீகரிக்கப்பட்ட மொத்த பணிநிலைத்திறன் கீழ்கண்டவாறு உள்ளது.

## தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் நிர்வாகம் மற்றும் பணிநிலைத் திறன் பட்டியல்

| வ. எண் | பதவியின் பெயர் | பணி நிலைத் திறன் |
|---|---|---|
| 1 | மேலாண்மை இயக்குநர் | 1 |
| 2 | இணை மேலாண்மை இயக்குநர் | 1 |
| 3 | தலைமை விழிப்புபணி அலுவலர் | 1 |
| 4 | பொது மேலாளர் | 10 |
| 5 | துணை பொது மேலாளர் | 24 |
| 6 | உதவி பொது மேலாளர் | 65 |
| 7 | மேலாளர் | 108 |
| 8 | துணை மேலாளர் | 173 |
| 9 | தனிச் செயலர் நிலை 1, 2 & 3 | 24 |
| 10 | செயல்அலுவலர் | 165 |
| 11 | இளநிலை செயல் அலுவலர் (அலுவலகம்)/தட்டச்சு | 146 |
| 12 | ஓட்டுநர் | 240 |
| 13 | தொழில்நுட்ப பணியாளர் மற்றும் முதுநிலை தொழிற்சாலை உதவியாளர் | 1,128 |
| **மொத்தம்** | | **2,086** |



## 5.3. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தால் நடத்தப்படும் பால் பண்ணைகள்

| வ. எண். | பால் பண்ணையின் பெயர் மற்றும் அமைவிடம் | செயலாக்கத் திறன் பதப்படுத்துதல் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | ISO சான்றிதழ் |
|---|---|---|---|
| 1. | மாதவரம் பால் பண்ணை | 5.00 | ISO 22000:2005 (FSMS) |
| 2. | அம்பத்தூர் பால் பண்ணை | 5.00 | ISO 22000:2005 (FSMS) |
| 3. | சோழிங்கநல்லூர், பால் பண்ணை | 6.00 | ISO 22000:2005 (FSMS) |
| 4. | பால் பொருட்கள் பண்ணை, அம்பத்தூர் | 0.65 | ISO 22000:2005 (FSMS) |
| 5. | பால் மற்றும் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை, திருவண்ணாமலை | 2.00 | ISO 22000:2018 and FSSC |

- மாதவரத்தில் உள்ள மத்திய பால் பண்ணை, தமிழ்நாட்டில் நிறுவப்பட்ட முதல் பால் பண்ணை ஆகும்
- சோழிங்கநல்லூர் பால் பண்ணை (III வது பால் பண்ணை) தென்னிந்தியாவில் முதன் முதலாக 1996–ல் நிறுவப்பட்ட தானியங்கி பால் பண்ணை ஆகும்
- சோழிங்கநல்லூரில் நாளொன்றுக்கு 1000 – 1100 கிலோ நீராவியை உற்பத்தி செய்யும் செறிவூட்டப்பட்ட சூரிய வெப்ப அமைப்பு மூலம், உலை எண்ணையின் பயன்பாடு குறைக்கப்பட்டுள்ளது
- திருவண்ணாமலை பால் பண்ணை மற்றும் பால் பவுடர் தொழிற்சாலையின் (DCPP) முக்கிய நோக்கம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் உபரிப் பாலை வெண்ணெய் மற்றும் பால் பவுடராக உருமாற்றம் செய்வதே ஆகும்



## ஆவின் பால் பொருட்களின் வகைகள்

| இனிப்புகள் | ஐஸ்கிரீம் வகைகள் | நொதியூட்டப்பட்ட பால் பொருட்கள் | கூழ்மப் பொருட்கள் மற்றும் பிற |
|---|---|---|---|
| • இனிப்பு கோவா<br>• பேரிச்சை கோவா<br>• மைசூர்பா<br>• குலோப்ஜாமுன்<br>• பால்பேடா<br>• ரசகுல்லா<br>• பிரிமியம் மில்க் கேக்<br>• பாயாசம் மிக்ஸ் | • கப் ஐஸ்கிரீம்<br>• ஐஸ்கிரீம் பேமலி சிப்பம்<br>• பந்து ஐஸ்கிரீம்<br>• சாக்கோ பார்<br>• மாங்கோ டூயட்<br>• பைனாப்பிள் டூயட்<br>• திராட்சை டூயட்<br>• 2 இன் 1 பார்<br>• ஸ்ட்ராபெர்ரி கோர்<br>• மாங்கோ கோர்<br>• சாக்கோ பீஸ்ட்<br>• சாக்லேட் பீஸ்ட்<br>• பிரிமியம் வகை கப் ஐஸ்கிரீம்<br>• பிரிமியம் வகை ஸ்கூப் ஐஸ்கிரீம் (6 வகைகள்)<br>• சாக்லேட் கோன்<br>• வெனிலா கோன்<br>• குல்ஃபி பார்<br>• கசட்டா<br>• சுவையூட்டப்பட்ட குல்ஃபி பார் (10 சுவைகள்)<br>• இனிப்பில்லாத குல்ஃபி பார்<br>• லாங் குல்ஃபி பார் | • சுவையூட்டப்பட்ட யோகர்ட் (5 சுவைகள்)<br>• இனிப்பில்லாத யோகர்ட்<br>• தயிர்<br>• லஸ்சி<br>• பாக்கெட் மோர்<br>• பிரிமியம் தயிர்கப்புகள்<br>• பாட்டில்களில் அடைக்கப்பட்டமோர்<br>• புரோபயாட்டிக் தயிர்<br>• புரோபயாட்டிக் லஸ்சி<br>• மாம்பழம் & ஸ்ட்ராபெர்ரி சுவைகளில் யோகர்ட் பானம் | பனீர்<br><br>பிற பொருட்கள்<br><br>• இனிப்பு இல்லா கோவா<br>• பால் சாக்லேட்<br>• நட்டி சாக்லேட்<br>• குக்கீஸ் (6 வகைகள்)<br>• பால் புரத நூடுல்ஸ்<br>• டெய்ரி ஒய்ட்னர் |

## 5.4. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தால் நடத்தப்படும் சேவை நிறுவனங்கள்

### 5.4.1 கால்நடை தீவன ஆலை – ஈரோடு

1982 ஆம் ஆண்டில் ஈரோட்டில் கால்நடை தீவன ஆலை நிறுவப்பட்டு தற்போது நாளொன்றுக்கு 300 மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்டதாக இயங்கி வருகிறது.

2021–2022 ஆம் ஆண்டில் ஈரோடு கால்நடை தீவன ஆலையில் தீவன உற்பத்தி 35,454 மெட்ரிக் டன்னாகவும், கால்நடை தீவன விற்பனை 35,171 மெட்ரிக் டன்னாகவும் உள்ளது.

மேலும், 2021–2022 ஆம் ஆண்டில், ஈரோடு கால்நடை தீவனம் தவிர, இதர கூட்டுறவு இணையங்கள் மூலம் 54,766 மெட்ரிக் டன் கால்நடை தீவனம் கொள்முதல் செய்யப்பட்டு பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.



### 5.4.2 தாது உப்புக் கலவை ஆலை

தற்போது விழுப்புரம், திருச்சி, தூத்துக்குடி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் நாளொன்றுக்கு தலா 12 மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்ட தாது உப்பு கலவை தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன.

இத்தாது உப்பு கலவை தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் தாது உப்பு கலவை, கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள பால் உற்பத்தியாளர்களின் தேவைக்கு வழங்கியது போக, கால்நடை பராமரிப்பு துறைக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

பால் உற்பத்தியாளர்களுக்கு தங்கு தடையில்லாமல் தாது உப்பு கலவை வழங்குவதை உறுதி செய்யும் பொருட்டு, 12 மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்ட புதிய தாது உப்பு கலவை தொழிற்சாலை ரூ.135.00 இலட்சம் செலவில் கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் 19.01.2022 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

2021–2022 ஆம் ஆண்டில் மேற்கூறிய தாது உப்பு கலவை தொழிற்சாலைகளில் தாது உப்பு கலவை உற்பத்தி 1,636 மெட்ரிக் டன்னாகும் மற்றும் தாது உப்பு கலவை விற்பனை 1,289 மெட்ரிக் டன்னாகும்.

### 5.4.3. கருவூலக ஜெர்சி மற்றும் பொலிகாளைப் பண்ணை, உதகமண்டலம்

கருவூலக ஜெர்சி மற்றும் பொலிகாளைப் பண்ணை 1973–ம் வருடம் தரமான உறைவிந்து குச்சிகள் உற்பத்திக்காக தொடங்கப்பட்டது. இப்பண்ணையில் ஜெர்சி, கலப்பின ஜெர்சி, ஹோல்ஸ்டீன் ஃப்ரீசியன் மற்றும் கலப்பின ஹோல்ஸ்டீன் ஃப்ரீசியன் காளைகளில் இருந்து உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்படுகிறது.

இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட உறைவிந்து குச்சிகள் பின்னர் ஈரோட்டில் உள்ள எருமையின உறைவிந்து நிலையத்தில் சேமித்து வைக்கப்படுகிறது. எருமையின உறைவிந்து நிலையத்திலிருந்து பிரதம பால் உற்பத்தியாளர்கள்



சங்கங்களுக்கு மாவட்ட ஒன்றியங்கள் மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது. இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்ட உறைவிந்து குச்சிகளை கொண்டு பயிற்சி பெற்ற கிராமநிலை ஊழியர்கள் மூலம் பால் உற்பத்தியாளர்களின் இல்லத்திற்கே சென்று அவர்களின் கறவைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் செய்யப்படுகிறது.

பொலிகாளை பண்ணையில் தற்போது, 99 காளைகள் உள்ளன. அவற்றுள் 65 பொலிகாளைகளிடமிருந்து விந்து சேகரிக்கப்படுகிறது. அயல் நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இரண்டு ஜெர்சி மற்றும் இரண்டு ஹோல்ஸ்டீன்–ஃப்ரீசியன் இன பொலிகாளைகள் உறைவிந்து உற்பத்திக்காக பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப்பொலிகாளைகள் ஒன்றிய அரசின் குறைந்தபட்ச தரக்கட்டுப்பாட்டு நெறிமுறைகள் அடிப்படையில் (Minimum Standard Protocol) கடுமையான உயிர் பாதுகாப்பு முறைகளின் (Strict Biosecurity measures) முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உயர்தர

உறைவிந்து குச்சிகள் உற்பத்திக்காக வளர்க்கப்படுகின்றன. 2021-22 ஆம் வருடம் 7.58 இலட்சம் உறைவிந்து குச்சிகள் இப்பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும், 2022-23 ஆம் வருடம் 15.00 இலட்சம் உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

கருவூலக ஜெர்சி மற்றும் பொலிகாளைப் பண்ணை ISO 9001 : 2015 சான்று பெற்ற நிறுவனம் ஆகும், அத்துடன் ஒன்றிய அரசின் உறைவிந்து நிலையங்களுக்கான தர ஆய்வு குழுவின் 'B' தர சான்றும் பெற்றுள்ளது.

**5.4.4 எருமையின உறைவிந்து நிலையம், ஈரோடு**

ஒன்றிய அரசின் குறைந்தபட்ச தரக்கட்டுப்பாட்டு நெறிமுறைகள் அடிப்படையில் உறைவிந்து குச்சிகள் விநியோக நிலையம், உறைவிந்து உற்பத்தி நிலையத்திலிருந்து தொலை தூரத்தில் அமையவேண்டும். அதன் அடிப்படையில், உறைவிந்து விநியோக நிலையம்



ஈரோட்டில் உள்ள முந்தைய எருமையின உறைவிந்து நிலையத்தில் அமைந்துள்ளது.

தேசிய பால்வள திட்டம் மற்றும் ராஷ்ட்ரீய கோகுல் மிஷன் – வம்சாவழி சோதனை திட்டத்தின் நீண்ட கால பாதுகாப்பு உறைவிந்து குச்சிகள் இந்நிலையத்தில் பாதுகாக்கப்படுகின்றன.

உறைவிந்து குச்சிகளின் விநியோகம் மட்டுமின்றி, வம்சாவழி திட்டம் மற்றும் களவெளி செயல்திறன் பதிவு திட்ட கிடேரிகள் இந்நிலையத்தின் கீழ் உள்ள முன் தனிமை படுத்தும் நிலையம், ஆத்தூர், சேலம் மாவட்டம் தனிமைப்படுத்தும் நிலையம், ஈரோடு மற்றும் கன்று வளர்ப்பு நிலையம், புதுக்குடி, தஞ்சாவூர் மாவட்டம் ஆகியவற்றில் பராமரிக்கப்பட்டு பின் உதகையில் உள்ள பொலிகாளை பண்ணை மற்றும் இதர உறைவிந்து நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்படுகிறது.

இந்நிலையத்திலிருந்து 2021 – 22 ம் வருடம் 13.06 இலட்சம் பசுவின உறைவிந்து

குச்சிகள் மற்றும் 0.27 இலட்சம் எருமையின உறைவிந்து குச்சிகள் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

**5.4.5. கறவையின மேம்பாட்டு திட்ட செயல்பாடுகள், ஈரோடு**

இத்திட்ட பிரிவின் முக்கிய நோக்கம், உயர் மரபுத்திறனுள்ள பொலிகாளை கன்றுகளை உற்பத்தி செய்து அவற்றை உறைவிந்து நிலையங்களுக்கு விநியோகித்தல் ஆகும்.

இப்பிரிவின் கீழ், ஜெர்சி கலப்பின களவெளி செயல்திறன் திட்டம் 2007 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. மேலும் இதுவரை இத்திட்டத்தில் ஐந்து தொகுப்புகள் முடிவுற்றுள்ளன. இத்திட்டத்தின் மூலம் 435 பொலிகாளை கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு கால்நடை பராமரிப்புத் துறை (320) மற்றும் இணையம் கருவூலக ஜெர்சி மற்றும்



பொலிகாளைப் பண்ணைக்கு (115) அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தற்போது, ஒன்றிய அரசின் நிதி மூலம் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை வழியாக ஆறாவது தொகுப்பு திட்டம் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 120 உயர் மரபுத்திறனுள்ள பொலிகாளை கன்றுகள் ரூ.69.14 இலட்சம் திட்ட மதிப்பில் உற்பத்தி செய்யப்பட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பில் ரூ.47.78 இலட்சம் ஒன்றிய அரசின் பங்காகும்.

ஆறாவது தொகுப்பில் ஜெர்சி கலப்பின களவெளி செயல்திறன் பதிவு திட்டம் சேலம், நாமக்கல், கரூர், தருமபுரி, ஈரோடு, கோவை, மதுரை, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய ஒன்பது மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் நடைபெறுகிறது.

இத்திட்டத்தின் கீழ் அதிக அளவில் பால் தரும் பசுக்கள் பதிவு செய்யப்பட்டு அவற்றிற்கு 10

மாதங்கள் வரை பால் பதிவு மேற்கொள்ளப்படும். அந்த பதிவுகளின் அடிப்படையில் சிறந்த மரபியல் திறன் உள்ள பசுக்கள் தேர்வு செய்யப்படுகிறது. இவ்வாறு தேர்வு செய்யப்பட்ட சிறந்த பசுக்களுக்கு வம்சாவழி சோதனை திட்டம் மூலம் தரவரிசை செய்யப்பட்ட சிறந்த பொலிகாளைகளிடமிருந்து பெறப்பட்ட உறைவிந்து குச்சிகளை கொண்டு செயற்கை முறை கருவூட்டல் செய்து உயர் மரபுத் திறன் உள்ள பொலிகாளைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் காளைக் கன்றுகள் கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்திற்கு சொந்தமான உறைவிந்து நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

**6. கால்நடை வளங்கள்**

தமிழ்நாட்டில் சுமார் 16.72 இலட்சம் கறவையினங்கள் கூட்டுறவு அமைப்பின் கீழ்



உள்ளன. இதில் 16.37 இலட்சம் பசுக்கள் மற்றும் 0.35 இலட்சம் எருமைகள் உள்ளன.

மேற்கூறிய கறவையினங்களுக்கான உறைவிந்து குச்சிகள், நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் கருவூலக ஜெர்சி மற்றும் பொலிகாளைப் பண்ணையில் உற்பத்தி செய்யப்படுகிறது. கிராம அளவில் உள்ள பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் உள்ள 2,603 பயிற்சி பெற்ற கிராமநிலை ஊழியர்கள் மூலம் செயற்கை முறை கருவூட்டல் செய்யப்படுகின்றன. 2021-22 ஆம் ஆண்டில் 16.77 இலட்சம் செயற்கை முறை கருவூட்டல்கள் மாவட்ட ஒன்றியங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்மூலம், 5.60 இலட்சம் கன்றுகள் பிறந்துள்ளன.

## 7. பால் கொள்முதல்

கிராமப்புற அளவில் செயல்படும் பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலம் பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இவ்வாறு கொள்முதல் செய்யப்படும் பாலில் உள்ளூர் விற்பனை போக, மீதமுள்ள உபரி பால் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

கிராமப்புற பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலம் நாளொன்றுக்கு சராசரியாக 38.26 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. அவற்றுள், 3.66 இலட்சம் லிட்டர் பால் கிராம அளவில் உள்ளூர் தேவைக்காக விற்பனை செய்யப்படுகிறது. மீதமுள்ள உபரி பால் 34.60 இலட்சம் லிட்டர் பால் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களுக்கும், பெருநகர பால் பண்ணைகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.



மேலும், பால் உற்பத்தியாளர்கள் வழங்கிய பாலுக்குண்டான பால் பண பட்டுவாடா வாரமொரு முறை / 10 நாட்களுக்கு ஒரு முறை / இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை / மாதமொரு முறை அவர்கள் வழங்கிய பாலின் அளவு மற்றும் தரத்தின் அடிப்படையில் வழங்கப்படுகிறது.

**மாவட்ட ஒன்றிய வாரியாக பால் கொள்முதல் (நாளொன்றுக்கு சராசரி லிட்டரில்)**

| வ, எண், | மாவட்ட ஒன்றியத்தின் பெயர் | 2021–22 ( சராசரி பால் கொள்முதல்) |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம்–திருவள்ளூர் | 1,13,037 |
| 2 | விழுப்புரம் | 1,78,437 |
| 3 | கடலூர் | 42,112 |
| 4 | வேலூர் | 1,28,791 |
| 5 | திருவண்ணாமலை | 2,53,141 |
| 6 | தர்மபுரி | 1,30,870 |
| 7 | கிருஷ்ணகிரி | 83,746 |
| 8 | சேலம் | 5,13,411 |
| 9 | நாமக்கல் | 1,44,421 |

| வ, எண், | மாவட்ட ஒன்றியத்தின் பெயர் | 2021-22 ( சராசரி பால் கொள்முதல்) |
|---|---|---|
| 10 | ஈரோடு | 2,16,488 |
| 11 | திருப்பூர் | 2,22,436 |
| 12 | கோயம்புத்தூர் | 1,66,649 |
| 13 | நீலகிரி | 11,031 |
| 14 | மதுரை | 2,06,299 |
| 15 | தேனி | 1,04,333 |
| 16 | திண்டுக்கல் | 79,509 |
| 17 | திருச்சி | 4,81,966 |
| 18 | கரூர் | 77,199 |
| 19 | தஞ்சாவூர் | 83,620 |
| 20 | புதுக்கோட்டை | 60,350 |
| 21 | சிவகங்கை | 64,782 |
| 22 | விருதுநகர் | 16,361 |
| 23 | திருநெல்வேலி | 44,666 |
| 24 | தூத்துக்குடி | 31,709 |
| 25 | கன்னியாகுமரி | 4,734 |
| | **மொத்தம்** | **34,60,098** |



## 8. பால் விற்பனை

விற்பனையை அதிகரிக்க இணையம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் விற்பனை பிரிவு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

பின்வரும் பால் வகைகள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

- நிலைப்படுத்தப்பட்ட பால்
- சிறப்பு நிலைப்படுத்திய பால்
- சமன்படுத்தப்பட்ட பால்
- நிறை கொழுப்புப் பால்
- இருநிலை சமன்படுத்தப்பட்ட பால்
- பசும்பால்
- டிமேட்
- ஆவின் கோல்டு

அனைத்து பால் பொருட்களான நெய், வெண்ணெய், மோர், தயிர், லஸ்ஸி, யோகர்ட், குலாப்ஜாமூன், ரசகுல்லா, கோவா, பல்வேறு வகையான சுவைகளில் சுவையூட்டப்பட்ட பால்

மற்றும் ஐஸ்கிரீம் ஆகியவற்றை ஆவின் நிறுவனம் உற்பத்தி செய்து வருகிறது.

### 8.1 நுகர்வோர் பால் அட்டைகள்

கூட்டுறவு அமைப்பில் இயங்குகின்ற பால் பண்ணைகளில் ஆவின் நிறுவனம் மட்டும்தான் இந்தியாவில் மாதாந்திர நுகர்வோர் அட்டைகளை விற்பனை செய்து வருகிறது. இதன் மூலம் அதிகமான அளவில் நுகர்வோர்களை கவர்வதோடு மட்டுமல்லாமல், முன்பணம் அடிப்படையில் குறைந்த விலைக்கு பாலை விற்பது மூலம் தடையின்றி நுகர்வோர்களுக்கு பால் கிடைக்க வழிவகை செய்யப்படுகிறது.

நுகர்வோர்களின் இல்லங்களுக்கு நேரடியாக சென்று ஆவின் பால் எளிதில் கிடைக்க செய்வதன் மூலம் நுகர்வோர்களுக்கு வழங்குகின்ற சேவையினை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.



### 8.2 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் பால் விற்பனை

2021-22 ஆம் நிதியாண்டின் பால் விற்பனை 2020-21 ஆம் ஆண்டோடு ஒப்பிடும் போது சராசரியாக 12 சதவிகிதம் அளவு அதிகரித்துள்ளது. அதாவது, நாளொன்றுக்கு 11.67 இலட்சம் லிட்டர் என்ற விற்பனை அளவிலிருந்து 13.05 இலட்சம் லிட்டர் அளவுக்கு பால் விற்பனை உயர்ந்துள்ளது.

அதிக அளவில் நுகர்வோர்களை கவரும் பொருட்டு ஆவின் தொடர்ந்து புதிய பால் பொருட்களை அறிமுகம் செய்து வருகிறது.

**மாவட்ட ஒன்றியம் வாரியான பால் விற்பனை ஒப்பீடு**

| வ. எண் | ஒன்றியத்தின் பெயர் | பால் விற்பனை அளவு (நாளொன்றுக்கு சராசரி லிட்டரில்) | | | |
|---|---|---|---|---|---|
| | | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
| 1 | காஞ்சிபுரம்–திருவள்ளூர் | 23,777 | 34,215 | 57,556 | 70,356 |
| 2 | விழுப்புரம் | 20,876 | 16,600 | 6,276 | 9,782 |
| 3 | கடலூர் | -- | 15,765 | 21,572 | 27,831 |
| 4 | வேலூர் | 71,564 | 68,304 | 60,331 | 65,449 |
| 5 | திருவண்ணாமலை | -- | 7,502 | 8,134 | 9,846 |
| 6 | தர்மபுரி | 27,336 | 6,448 | 4,994 | 5,759 |

| வ. எண் | ஒன்றியத்தின் பெயர் | பால் விற்பனை அளவு (நாளொன்றுக்கு சராசரி லிட்டரில்) | | | |
|---|---|---|---|---|---|
| | | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
| 7 | கிருஷ்ணகிரி | -- | 18,700 | 17,967 | 21,432 |
| 8 | சேலம் | 1,50,241 | 1,55,402 | 1,67,291 | 1,86,059 |
| 9 | நாமக்கல் | 50,023 | 61,349 | 60,199 | 68,790 |
| 10 | ஈரோடு | 64,312 | 63,881 | 57,573 | 62,342 |
| 11 | கோயம்புத்தூர் | 1,46,734 | 1,48,498 | 1,55,191 | 1,73,197 |
| 12 | திருப்பூர் | 14,582 | 13,340 | 15,423 | 20,367 |
| 13 | நீலகிரி | 16,578 | 16,542 | 16,005 | 17,515 |
| 14 | மதுரை | 1,67,259 | 1,76,788 | 1,75,962 | 1,81,167 |
| 15 | தேனி | -- | 6,023 | 5,388 | 5,712 |
| 16 | திண்டுக்கல் | 15,981 | 16,529 | 17,507 | 22,659 |
| 17 | திருச்சி | 1,19,896 | 1,13,406 | 1,16,753 | 1,23,164 |
| 18 | கரூர் | -- | 5,562 | 5,266 | 5,977 |
| 19 | தஞ்சாவூர் | 29,795 | 32,492 | 40,666 | 47,866 |
| 20 | புதுக்கோட்டை | 14,568 | 17,020 | 18,013 | 24,517 |
| 21 | சிவகங்கை | 37,800 | 43,670 | 54,734 | 65,475 |
| 22 | விருதுநகர் | 5,978 | 6,878 | 6,238 | 9,037 |
| 23 | திருநெல்வேலி | 42,860 | 28,695 | 33,982 | 34,545 |
| 24 | தூத்துக்குடி | -- | 21,921 | 26,187 | 27,454 |
| 25 | கன்னியாகுமரி | 16,004 | 18,079 | 18,145 | 18,923 |
| | Total | 10,42,164 | 11,13,609 | 11,67,353 | 13,05,220 |

## 8.3 சென்னை பெருநகரில் பால் விற்பனை

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் பால் மற்றும் பால் பொருட்களை விற்பனை செய்வதில் முக்கிய பங்காற்றுகிறது. 2021–22 ஆம்



ஆண்டில் சென்னை பெருநகர பால் விற்பனை சராசரியாக நாளொன்றுக்கு 13.36 இலட்சம் லிட்டர் ஆக உள்ளது. மேலும், 2022–23 ஆம் ஆண்டில் 15.00 இலட்சம் லிட்டர் ஆக விற்பனையை உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

**சென்னை பெருநகரில் பால் விற்பனை (நாளொன்றுக்கு சராசரி இலட்சம் லிட்டரில்)**

| வ. எண் | விவரம் | 2017–18 | 2018–19 | 2019–20 | 2020–21 | 2021–22 |
|---|---|---|---|---|---|---|
| 1 | சென்னை பெருநகர பால் விற்பனை | 11.91 | 12.09 | 12.11 | 12.63 | 13.36 |

## 8.4 பால் விற்பனை விலை

ஏழைக் குழந்தைகள் மற்றும் மகளிர் பால் நுகர்வோர்கள் பெரிதும் பயன்பெறும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி அனைத்து வகையான ஆவின் பால் விற்பனை விலை லிட்டர் ஒன்றுக்கு

ரூ.3/– குறைத்து 16.05.2021 முதல் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

**திருத்தி அமைக்கப்பட்ட பால் விற்பனை விலை பட்டியல்**

| வ. எண் | பாலின் வகை | பால் பை நிறம் | விவரம் | | 500 மில்லி லிட்டருக்கான விற்பனை விலை (ரூ) (16.05.2021 முதல்) | |
|---|---|---|---|---|---|---|
| | | | கொழுப்பு சத்து % | கொழுப்பு அல்லாத இதர சத்து % | அட்டை தாரர் களுக்கு | அதிகபட்ச சில்லரை விற்பனை விலை |
| 1 | இருமுறை சமன் படுத்தப்பட்ட பால் | மெஜந்தா | 1.5 | 9.0 | 18.00 | 18.50 |
| 2 | சமன் படுத்தப்பட்ட பால் | நீலம் | 3.0 | 8.5 | 18.50 | 20.00 |
| 3 | நிலைப் படுத்தப்பட்ட பால் | பச்சை | 4.5 | 8.5 | 21.00 | 22.00 |
| 4 | நிறை கொழுப்புப் பால் | ஆரஞ்சு | 6.0 | 9.0 | 23.00 | 24.00 |



மேற்படி விற்பனை விலை குறைப்பு காரணமாக ஆவின் பால் விற்பனை நாளொன்றுக்கு சராசரியாக 2.80 இலட்சம் லிட்டர் அதிகரித்துள்ளது.

## 8.5 சென்னை பெருநகரங்களில் பால் பொருட்கள் விற்பனை

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களால் உற்பத்தி செய்யப்படும் பால் மற்றும் பால் பொருட்கள் சென்னை பெருநகர மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சென்னை பெருநகரங்களில் 'ஆவின்' பால் அதிக அளவில் விற்பனையாகிறது. ஆவின் விற்பனைப் பிரிவு சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்களை அதிக அளவில் நியமித்து பால் பொருட்களை விற்பனை செய்ய பெரிதும் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

2020–21 ஆம் ஆண்டில் இருந்த ரூ.26.53 கோடி மாதாந்திர சராசரி விற்பனையானது தற்போது, 2021–22 ஆம் ஆண்டில் ரூ.29.13 கோடியாக உயர்ந்து பால் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

சில்லறை விற்பனை கடைகளில் ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் கிடைப்பது மற்றும் விற்பனை செய்வது குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த, கவர்ச்சிகரமான வண்ணங்களில் பெயர் பலகைகள், அறிவிப்பு பலகைகள் மற்றும் தொங்கவிடும் விளம்பர அட்டைகள் ஆகியவை சில்லறை விற்பனையாளர்களுக்கு வழங்கப்படுகின்றன.

முதல் நிலை விற்பனை பிரிவு ஊழியர்கள் மூலம் சென்னை மற்றும் மாவட்ட தலைநகரங்களில் அமைந்துள்ள முக்கிய விற்பனை கடைகள் மற்றும் பிக் பஜார், ரிலையன்ஸ் ஃப்ரெஷ், ரிலையன்ஸ் சில்லறை விற்பனை, பெரிய சூப்பர் மார்க்கெட் போன்ற



இடங்களில் ஆவின் பால் பொருட்கள் விற்பனை செய்ய புரிந்துணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 8.6 சென்னை பெருநகர விற்பனை உட்கட்டமைப்பு வசதிகள்

விற்பனை அளவை அதிகரிக்க, சென்னை பெருநகர் மற்றும் புறநகர் பகுதிகளில், பால் மற்றும் பால் பொருட்களை விற்பனை செய்ய ஆவின் நிறுவனம் பின்வரும் நன்கு பிணைக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை கொண்டுள்ளது.

### விற்பனை உட்கட்டமைப்பு வசதிகள் (31.03.2022)

| வ. எண் | உட்கட்டமைப்பு விவரம் | 2013-14 | 2014-15 | 2015-16 | 2016-17 | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | விநியோக வழித்தடங்கள் | 113 | 117 | 119 | 132 | 148 | 157 | 157 | 173 | 198 |
| 2 | வட்டார அலுவலகங்கள் | 16 | 16 | 16 | 16 | 27 | 27 | 27 | 27 | 27 |
| 3 | பால் வழங்கும் நிலையங்கள் | 470 | 470 | 433 | 437 | 441 | 493 | 493 | 456 | 471 |
| 4 | விநியோகிக்கும் இடங்கள் | 311 | 311 | 361 | 376 | 485 | 512 | 530 | 597 | 645 |

| வ. எண் | உட்கட்டமைப்பு விவரம் | 2013-14 | 2014-15 | 2015-16 | 2016-17 | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | பாலகங்கள் | 93 | 93 | 114 | 147 | 221 | 227 | 218 | 248 | 255 |
| 6 | மொத்த பால் விநியோகிப்பாளர்கள் | 47 | 71 | 71 | 83 | 84 | 84 | 76 | 11 | 63 |
| 7 | பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் | 48 | 48 | 48 | 48 | 48 | 48 | 48 | 48 | 48 |
| 8 | ஆவின் உரிமம் பெற்ற சில்லறை விற்பனையாளர்கள் | 184 | 202 | 451 | 556 | 594 | 649 | 651 | 1,245 | 1385 |
| 9 | பால் பொருட்கள் விநியோக வழித் தடங்கள் | 14 | 16 | 25 | 33 | 33 | 36 | 35 | 42 | 42 |

## 8.7 சந்தைப்படுத்தும் நிலையங்கள்

பால் மற்றும் பால் பொருட்கள் நுகர்வோர் மற்றும் பொது மக்களை எளிதில் சென்றடைய ஏதுவாக பின்வரும் உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

1. அனைத்து மாவட்டங்களிலும் தினமும் பால் விநியோகம் செய்ய பால் டிப்போக்கள் மற்றும் பால் விநியோக மையங்கள், விற்பனை நிலையங்களாக செயல்பட்டு வருகின்றன.

2. ஆவின் பால் பொருட்களுக்காக பிரத்தியேகமாக விற்பனை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| ஆவின் அதிநவீன பாலகங்கள் (இணையம்) | 21 |
| தனியார் பாலகங்கள் | 1,848 |
| மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் நடத்தப்படும் அதிநவீன பாலகங்கள் | 44 |
| மொத்த விற்பனையாளர்கள் | 377 |

3. அதிக அளவில் விற்பனையாளர்கள் மற்றும் பால் முகவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**மேலும் கீழ்க்கண்ட வழிவகைகளிலும் ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.**

1) தொழில் நிறுவனங்கள், கல்லூரிகள், அரசு மருத்துவமனைகள், விடுதிகள், அகதிகள் முகாம்கள் ஆகியவற்றிற்கும், பால் மற்றும் பால் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.
2) திருமணம் மற்றும் பிற விழாக்களுக்கு முன்கூட்டியே சிறப்பு ஆர்டர்களை முன்பதிவு செய்யும் வாடிக்கையாளர்களின் வீட்டிற்கே சென்று ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் வழங்கப்படுகின்றன.
3) ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் பொதுமக்களை சென்றடைய, சிறிய கடைகள், மளிகைக் கடைகள், டீ கடைகள், பேக்கரிகளில் பால் பொருட்கள் விற்கப்பட அதிக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், தற்போது சிறப்பு பதிவுத் திட்டத்தின் கீழ் சில்லறை விற்பனையாளர்கள் நியமனம் செய்ய வைப்புத் தொகை ரூ.10,000/- க்கு பதிலாக ரூ.1,000/- என குறைக்கப்பட்டுள்ளது.



**8.8 சிறப்பு விற்பனை முகாம்கள்**

கடந்த ஆண்டு தீபாவளி, கிறிஸ்துமஸ் மற்றும் பொங்கல் பண்டிகையின் போது விற்பனைக்காக இணையம் 5 வகையான ஆவின் சிறப்பு இனிப்புகளை அறிமுகப்படுத்தியது. அனைத்து மாவட்டங்களில் உள்ள அனைத்து நகரங்களிலும் தற்காலிக பார்லர்களை அமைத்து அதன்மூலம் பொது மக்களுக்கு இந்த சிறப்பு இனிப்புகள் விற்பனை செய்யப்பட்டன. இதேபோல், கோடையிலும் தற்காலிக பார்லர்கள் அமைக்கப்பட்டு, தயிர், மோர், லஸ்ஸி போன்ற பானங்கள் விற்பனை செய்யப்பட்டன.

தமிழக அரசின் 2022 வருடத்திற்கான பொங்கல் பரிசுத் தொகுப்பில் ஆவின் 100 மிலி நெய் ஜார் 2,15,67,122 எண்ணிக்கையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப விநியோக கழகம் மூலமாக ரூ.120.77 கோடி மதிப்பிற்கு விநியோகம் செய்யப்பட்டது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களும் பயனடைந்தனர்.

2021 தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஆவின் நிறுவனத்தின் மூலம் சிறப்பு இனிப்பு வகைகள் மற்றும் இதர பால் பொருட்கள் ரூ.82.11 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டது. இது சென்ற ஆண்டு தீபாவளி பண்டிகை விற்பனையை விட 44 சதவீதம் அதிகமாகும்.

### 8.9 ஆவின் பால் பொருட்கள் ஏற்றுமதி செய்தல்

தரமதிப்பினை கூட்டவும், பால் மற்றும் பால் பொருட்களின் விற்பனையை கூட்டவும், ஆவின் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சேலம் ஒன்றியம் அதிவெப்பநிலையில் பதப்படுத்தப்பட்ட UHT பால் மற்றும் நறுமண பால் டெட்ரா பாக்கெட்டுகளுக்கு ஏற்றுமதி உரிமம் பெற்றுள்ளது. மேலும் ஈரோடு ஒன்றியம் நெய் ஏற்றுமதிக்கான உரிமம் பெற்றுள்ளது. திருவண்ணாமலை பால் மற்றும் பால் பவுடர்



ஆலை, கொழுப்பு நீக்கப்பட்ட பால் பவுடர் மற்றும் நெய்யிற்கான ஏற்றுமதி உரிமம் பெற்றுள்ளது.

சிங்கப்பூர், ஹாங்காங், கத்தார் மற்றும் துபாய் போன்ற அயல் நாடுகளுக்கு ஆவின் பால் பொருட்கள் ஏற்றுமதி செய்து வருகிறது. இதர வெளிநாடுகளுக்கும் பால் பொருட்களை ஏற்றுமதி செய்ய ஆவின் நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இதுவரை வெளிநாடுகளுக்கு ரூ.355.30 இலட்சம் மதிப்பிலான 7,15,476 லிட்டர் பால் மற்றும் ரூ.115.39 இலட்சம் மதிப்பிலான நெய் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதுவரை ரூ.0.99 இலட்சம் மதிப்பிலான 1,107 லிட்டர் நறுமணப்பால் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஆவின் பொருட்களை ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநிலங்களில் விற்பனை செய்வதற்கு 'மொத்த விற்பனையாளர்'களாக நியமன உத்தரவும், ஐக்கிய அரபு நாடுகள், துபாய்,

அபுதாபி, ஷார்ஜா, அஜ்மன், ஓமன், கத்தார், கனடா மற்றும் அமெரிக்கா (கலிபோர்னியா) ஆகிய வெளிநாடுகளில் ஆவின் பொருட்களை விற்பனை செய்வதற்கு 'வணிக ஒப்பந்த' ஆணைகளை வணிக ஏற்றுமதியாளர்களுக்கு 21.08.2021 அன்று வழங்கினார்கள்.

வெளிநாடுகளுக்கு ஆவின் பொருட்களை விற்பனை மேற்கொள்ள மொத்த ஏற்றுமதி விற்பனையாளர்களை நியமனம் செய்வதற்காக விண்ணப்பப் படிவங்கள் ஆவின் இணைய தளத்திலிருந்து (www.aavinmilk.com) இலவசமாக தரவிறக்கம் செய்ய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனடிப்படையில் நியூசிலாந்து, ஐக்கிய அரபு நாடுகள், அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்ற வெளிநாடுகளுக்கு மொத்த ஏற்றுமதி விற்பனையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதிவெப்பநிலையில் பதப்படுத்தப்பட்ட பால் (UHT Milk) நெய் மற்றும் நறுமணப்பாலை ஏற்றுமதி செய்வதோடு பாதாம் மிக்ஸ் பவுடர், குலாப்ஜாமுன்



மிக்ஸ் மற்றும் பனீர் ஆகிய பால் பொருட்களை ஏற்றுமதி செய்ய இணையம் திட்டமிட்டுள்ளது.

கோவா, மைசூர்பா, பேடா, குலாப்ஜாமுன், ரசகுல்லா ஆகிய பால் பொருட்களின் கெடாத்தன்மை காலத்தினை அதிகரிக்கச் செய்து, ஏற்றுமதி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### 8.10 புதிய பால் பொருட்கள் விற்பனை

19.01.2022 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆவின் தயாரித்த புதிய ஐந்து வகையான பால் பொருட்களான டெய்ரி ஒயிட்னர், யோகர்ட், பால்கேக், பாயாசமிக்ஸ், பால்புரத நூடுல்ஸ்களை பொது மக்களின் பயன்பாட்டிற்கு அறிமுகம் செய்து வைத்தார்கள்.

### 8.11 மதிப்பு கூட்டிய பால் பொருள்

தென் தமிழக மக்களின் ஐஸ்கிரீம் தேவையினை பூர்த்தி செய்யும் பொருட்டு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 14.03.2022 அன்று காணொளி காட்சி மூலம் மதுரையில் நாளொன்றுக்கு 30 ஆயிரம் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட ஐஸ்கிரீம் தொழிற்சாலை தொடங்கி வைக்கப்பட்டது.

**8.12 விற்பனை விரிவாக்க திட்டங்கள்**

ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் எளிதில் கிடைக்காத இடங்களுக்கு (uncovered area) அதிகமான தனி உரிமை கிளைதாரர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

இணையம் மூலம் பால் மற்றும் பால் பொருட்களை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

அதிகமான எண்ணிக்கையில் நிறுவன மொத்த விற்பனையாளர்களை நியமிப்பது மூலம் ஆவின் பொருட்களை 5 கோடி மதிப்பில் விற்பனை எய்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



தற்போது, மின்வணிகம் அதிவேகத்தில் வளர்ந்து வருகிறது. ஆவின் நிறுவனமும் மின்வணிகத்தில் தனது பங்களிப்பை அதிகமான அளவில் உயர்த்த நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

ஆவின் பொருட்கள் சிங்கப்பூர், கத்தார், ஹாங்காங், இலங்கை மற்றும் குவைத் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.

மேலும் மொரீசியஸ், மலேசியா, அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**8.13 நுகர்வோர் சேவை மற்றும் ஆதரவு மையம்**

கட்டணமில்லா தொலைபேசி வசதியுடன் (எண். 1800–425–3300) கூடிய 24 x 7 நுகர்வோர் சேவை மற்றும் குறைதீர்க்கும் மையம் ஒன்று, சென்னை நந்தனத்தில் அமைந்துள்ள ஆவின் தலைமை அலுவலகத்தில் இயங்கி வருகிறது. இதன் மூலம் நுகர்வோர், இம்மையத்தை அணுகி

தங்களது கருத்துக்களை பதிவு செய்து, குறைகளை உடனுக்குடன் தீர்த்துக் கொள்ள ஏதுவாகிறது. கடந்த 2021–22–ல் மொத்தம் 2,199 புகார்கள் பெறப்பட்டு உரிய தீர்வு காணப்பட்டுள்ளது.

சமூக ஊடகங்கள் மூலமாக, (Facebook – Aavintn; Twitter @Aavintn and Instagram @aavintn) நுகர்வோர்களின் புகார்கள் பெறப்பட்டு அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**9. தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்**

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து பால்பண்ணைகள் ஆகியவற்றில் பால் மற்றும் பால் பொருட்களின் தரத்தை உறுதி செய்வதற்காக அதிநவீன தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களிருந்து பெறப்பட்ட பால், முழுமையாக



AMCU, DPMCU மற்றும் கணினிமயமாக்கப்பட்ட தானியங்கி பால் பரிசோதனை கருவிகளை கொண்டு பரிசோதிக்கப்படுகிறது. பாலின் அளவு மற்றும் தரத்தின் அடிப்படையில் விலை வழங்கப்படுகிறது.

மொத்த பால் குளிர்விப்பான் (BMC) மற்றும் குளிரூட்டும் நிலையங்களிலிருந்து (CC) பால் பண்ணைகளுக்கு பெறப்பட்ட பாலிலிருந்து, பல்வேறு பால் மற்றும் பால் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. பால் பண்ணைகளில் உள்ள தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களில் பாலின் தரம் மற்றும் சர்க்கரை, மாவு, யூரியா போன்ற கலப்படங்களுக்கான பரிசோதனைகளை உடனடி ஆய்வு செய்ய, அதிநவீன FTIR தொழில்நுட்ப அடிப்படையிலான பால் பகுப்பாய்வு உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் கலப்படமில்லா பாலை கொண்டு மட்டுமே பால் மற்றும் பால் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

பால் மற்றும் பால் பொருட்கள் உற்பத்தியின் ஒவ்வொரு கட்டத்திலும் உற்பத்தி மற்றும் தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் அனைத்தும் பயிற்சி பெற்ற உணவுப்பாதுகாப்பு மேற்பார்வையாளர்களால் (Food Safety Supervisors) கண்காணிக்கப்படுகின்றது. பால் மற்றும் பால் பொருட்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, தரமான உற்பத்தி செய்முறை (GMP) மற்றும் தரமான பராமரிப்பு நடைமுறைகள் (GHP) தரக்கட்டுப்பாட்டுக் குழுவினரால் கண்காணிக்கப்படுகின்றது. பால் பண்ணைகளில் உணவுப்பொருட்களை கையாள்பவர்களின் தனிப்பட்ட சுகாதாரமும் தரக்கட்டுப்பாட்டு பிரிவினரால் கண்காணிக்கப்பட்டு, சுகாதாரமான பால் மற்றும் பால் பொருட்கள் உற்பத்தியானது மேற்கொள்ளப்படுகிறது.

இணையத்தின் கீழ் இயங்கும் அம்பத்தூர், மாதவரம், சோழிங்கநல்லூர், அம்பத்தூர் பால் பொருட்கள் பண்ணை, பால்பவுடர் தொழிற்சாலை மற்றும் ஈரோடு, சேலம், மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஒன்றியங்கள் ISO 22000 உணவுப்



பாதுகாப்பு மேலாண்மை அமைப்பு (FSMS) சான்றிதழை பெற்றுள்ளன.

மேலும், பால் மற்றும் பால் பொருட்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், வாடிக்கையாளர்களுக்கு தரமான பொருட்களை அளிப்பதற்காகவும், மீதமுள்ள ஒன்றியங்களும் ISO: 22000 உணவு பாதுகாப்பு மேலாண்மை அமைப்பு சான்றிதழைப் (FSMS) பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையமானது AGMARK, BIS மற்றும் EIC போன்ற சான்றிதழ்களை பெற்று நெய், பால் பவுடர் மற்றும் UHT பால் ஆகியவற்றை மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் இணையத்தின் கீழ் இயங்கும் பால் பவுடர் தொழிற்சாலைகளில் உற்பத்தியினை மேற்கொண்டு வருகின்றன.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், பாலில் உள்ள பூச்சிக் கொல்லிகளின் அளவு, நுண்ணுயிர் கொல்லி / நோய் எதிர்ப்பு

மருந்துகள், கன உலோகங்கள், மற்றும் அஃப்ளோடாக்ஸின் M1 போன்றவற்றை கண்டறிய தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின் (NPDD) கீழ் மாநில மைய ஆய்வகத்தை அமைத்து வருகிறது. இவ்வாய்வகம் மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் இணையங்கள், பால் மற்றும் பால் பொருட்களின் தரத்தை ஒழுங்கு முறை ஆணையங்களின் விதிகளுக்குள் இருப்பதை உறுதி செய்வதற்கான தரப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட உள்ளது. தற்போது இந்த பரிசோதனைகள் அனைத்தும் NABL/FSSAI அங்கீகாரம் பெற்ற வெளி ஆய்வகங்களில் பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது.

மேலும் இவ்வாய்வகத்தில் Triple Quadruple Liquid Chromatography with Mass Spectrometer (LCMSMS), Gas Chromatography with Mass Spectrometer (GCMSMS) and Inductively Coupled Mass Spectrometer (ICPMS) போன்ற உயர்தொழில் நுட்ப உபகரணங்களை பயன்படுத்தி பாலில் உள்ள வேதியியல், ஊட்டச்சத்து கலவைகள் மற்றும் நச்சுக்கள் போன்றவை அறியப்பட்டு அவை



ஒழுங்கு முறை ஆணையங்களின் விதிகளுக்குள் இருப்பது உறுதி செய்யப்படும்.

கோயம்புத்தூர் ஒன்றியத்தில் அதிநவீன நுண்ணுயிர் ஆய்வுக்கூடம் பால் மற்றும் பால் பொருட்களின் நுண்ணுயிர் தர ஆய்விற்காகவும், அருகில் உள்ள ஒன்றியங்களின் பயன்பாட்டிற்காகவும் அமைக்கப்பட உள்ளது.

## 10. மாநில / ஒன்றிய அரசு நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் பால்பண்ணை வளர்ச்சி திட்டங்கள்

### 10.1 தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட உட்கட்டமைப்புகள் (NADP)

2007-08 முதல் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட நிதியின் மூலம் கிராம அளவில் பாலை குளிர்விக்கத் தேவையான தொகுப்பு குளிர்விப்பு மையங்கள், தரமான பால் கொள்முதல் செய்வதற்கு தேவையான பால் பகுப்பாய்வு உபகரணங்கள், பால்

டேங்கர்கள், பால் பொருட்களை சந்தைப்படுத்த எடுத்து செல்லும் வாகனங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டன.

2021–22 தேசிய வேளாண் அவிவிருத்தித் திட்டத்தின் கீழ் 162 கால்நடை மருத்துவ ஆலோசகர்கள் மூலம் 7,158 பிரதம பால் உற்பத்தியாளர் சங்கங்களில் உள்ள பால் உற்பத்தியாளர்களின் கறவையினங்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சை அளிப்பதோடு, இனவிருத்தி பணிகளையும் மேற்பார்வை செய்யப்படுகிறது.

**10.2 தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டம்**. (NPDD)

தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் பால் மற்றும் பால் பொருட்களை பதப்படுத்துவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுகிறது.



இத்திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசு ரூ.9,288.25 இலட்சம் நிதியினை வழங்கியுள்ளது. 2014–15 முதல் 2020–21 வரை இத்திட்டத்தின் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்ட மதிப்பு ரூ.10,580.75 இலட்சம் ஆகும்.

ஒரு இலட்சம் லிட்டர் கொள்முதல் திறன் கொண்ட ஒரு நவீன பால் பண்ணை, பாடாலூர், திருச்சிராப்பள்ளி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் நிறுவப்பட்டுள்ளது.

நாளது தேதி வரை 586 தொகுப்பு பால் குளிர்விப்பான்களை நிறுவியதன் மூலம் நாளொன்றுக்கு கிராம அளவிலேயே 20,60,500 லிட்டர் பாலை கூடுதலாக குளிர்விக்கும் வசதி உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும், எதிர்வரும் காலத்தில் 103 தொகுப்பு பால் குளிர்விப்பான்களை நிறுவுவதன் மூலம் 4,22,500 லிட்டர் பாலை குளிர்விக்க முடியும்.

தானியங்கி பால் கொள்முதல் கருவிகள், பால் சேகரிப்பு புள்ளி விவரக் கருவிகள், கலப்படப் பொருட்களை கண்டறியும் கருவிகள், மில்கோ–ஸ்கேன், மில்கோ–ஸ்கிரீன் ஆகிய கருவிகள், பால் உற்பத்தியாளர்களிடம் தரமான கலப்படமற்ற பாலை கொள்முதல் செய்வதற்கு வழங்கப்பட்டுள்ளது.

**10.3 தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட உட்கட்டமைப்பு திட்டங்கள் (NABARD–RIDF)**

2021–22 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ.2,362.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒன்றியத்தின் நிர்வாக அலுவலக கட்டடம், பாலை குளிர்விக்கும் அறை ஆகியவற்றை நாமக்கல், திருப்பூர் மாவட்டங்களில் உருவாக்குவதற்கும், நீலகிரி ஒன்றியத்தில் நாளொன்றுக்கு ஒரு மெட்ரிக் டன் பாலாடைக்கட்டி தயாரிக்கும் தொழிற்சாலையினை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



**10.4 தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் பால்பண்ணை உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட உட்கட்டமைப்பு திட்டங்கள் (NABARD – DIDF)**

இத்திட்டத்தின் கீழ் ஆவினின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுகின்றன.

2019–20 ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட கீழ்க்காணும் நான்கு திட்டங்களுக்கு ரூ.379.29 கோடி திட்ட மதிப்பீட்டில், ரூ.303.42 கோடி கடன் பங்களிப்பாக NABARD மூலம் பெறப்படும்

- ✓ தஞ்சாவூரில் 1 இலட்சம் லிட்டர் பாலை கையாளுகின்ற தானியங்கி அதி நவீன பால்பண்ணை நிறுவப்படும்.
- ✓ திருச்சியில் நாள் ஒன்றிற்கு 6,000 லிட்டர் ஐஸ்கீரிம் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவப்படும்.

✓ சேலத்தில் 7 இலட்சம் லிட்டர் பாலை கையாளும் திறன் கொண்ட அதி நவீன பால்பண்ணையுடன், 30 மெட்ரிக் டன் பால் பவுடர் தயாரிக்கின்ற தொழிற்சாலை உருவாக்கப்படும்.

✓ மாதவரத்தில் நாள் ஒன்றிற்கு 10 இலட்சம் லிட்டர் பாலை கையாளுகின்ற பால் பண்ணை மற்றும் எதிர்காலத்தின் தேவையினைக் கருத்தில் கொண்டு நாளொன்றுக்கு 15 இலட்சம் விரிவாக்கம் செய்யக்கூடிய அளவிற்கு ஒரு பால் பண்ணை அமைக்கப்படும்.

மேலும், 2020-2021 நிதியாண்டிற்காக மொத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.307.44 கோடியில் கடன் தொகையாக ரூ.245.95 கோடி NABARD மூலம் பெற்று உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும்.



## 10.5 இராஷ்டிரிய கோகுல் மிஷன் – வம்சாவழி சோதனை திட்டம்

இராஷ்டிரிய கோகுல் மிஷன் திட்டத்தின் கீழ் ரூ.2,087.51 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வம்சாவழி சோதனை திட்டத்தை அமல்படுத்தும் நிறுவனமாக தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இராஷ்டிரிய கோகுல் மிஷன் திட்டத்தின் கீழ், வேலூர், ஈரோடு, சேலம் ஆகிய 3 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் வம்சாவழி சோதனை திட்டம் தேசிய பால்வள வாரியத்தின் தொழில்நுட்ப வழிகாட்டுதல் படி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்:

- உயர் மரபியல் திறனுள்ள பொலிகாளைகளை உற்பத்தி செய்தல்

➢ இளம் பொலிகாளைகளை மரபியல் ரீதியாக மதிப்பீடு மற்றும் தரவரிசை செய்தல்

இத்திட்டத்தின் மூலம் 2023-24 க்குள் 225 உயர் மரபியல் திறனுள்ள பொலிகாளை கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு அவற்றில் இருந்து தேர்வு செய்யப்பட்ட 150 பொலிகாளை கன்றுகள் விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது வரை 141 பொலிகாளை கன்றுகள் இத்திட்டத்தில் கொள்முதல் செய்யப்பட்டு, அவற்றுள் 51 உயர் மரபியல் திறனுள்ள பொலிகாளை கன்றுகள் பல்வேறு பொலிகாளை பண்ணைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளன. மீதமுள்ள 90 பொலிகாளைகள் விநியோகம் செய்யப்பட தயார்நிலையில் உள்ளன.



## 10.6 தேசிய கால்நடை இயக்கம் (NLM)

பால் உற்பத்தியாளர்களின் கறவைகளுக்கு காப்பீடு திட்டம் அவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாப்பதற்காகவும் தொடர் பால் உற்பத்திக்காகவும் செயல்படுத்தப்படுகிறது. தேசிய கால்நடை இயக்கத்தின் கீழ், பால் உற்பத்தியாளர்களின் கறவைகளுக்கு காப்பீடு வழங்க மொத்த காப்பீட்டுத் தொகையில் 50 சதவீத மானியம் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை மூலம் வழங்கப்படுகிறது.

2021-22 ஆம் ஆண்டு, 25 மாவட்ட ஒன்றியங்களில் உள்ள 1.36 இலட்சம் கறவை பசுக்களுக்கு ஆவின் நிறுவனத்தின் மூலம் காப்பீடு வழங்கப்பட்டுள்ளது. 2022-23 ஆம் ஆண்டு கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள 1.30 இலட்சம் கறவை மாடுகளுக்கு காப்பீடு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 10.7 தேசிய செயற்கைமுறை கருவூட்டல் திட்டம் (NAIP)

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் கீழ் உள்ள பத்து மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் 12 மாவட்டங்களில் முறையே கடலூர், காஞ்சிபுரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, உதகமண்டலம், திருவண்ணாமலை, திருவள்ளூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகியவற்றில் செயற்கை முறை கருவூட்டல் வசதிகள் 50 சதவீதத்திற்கும் குறைவாக உள்ளதால் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இராஷ்டிரிய கோகுல் மிஷன் திட்டத்தின் கீழ் சிறந்த மரபியல் திறனுள்ள பொலிகாளைகளின் உறைவிந்து குச்சிகளை கொண்டு கிராமங்களில் உள்ள பசுவினங்கள் மற்றும் எருமையினங்களின் பால் உற்பத்தி திறனை மேம்படுத்துவதற்காக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.



இத்திட்டத்தின் முதல் மற்றும் இரண்டாம் கட்டங்கள் முடிவுற்றுள்ளது. மேலும், மூன்றாம் கட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட 1.50 இலட்சம் கறவைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் என்ற இலக்கில், இதுவரை 0.78 இலட்சம் கறவைகளுக்கு உயர் மரபியல் திறனுள்ள பொலிகாளைகளின் விந்து குச்சிகள் மூலம் செயற்கை முறை கருவூட்டல் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம், இராஷ்டிரிய கோகுல் மிஷன் மூலம் 100 சதவீத மானியத்தில் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை வழியாக கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் மூலம் கள அளவில் செயல்படுத்தப்படுகிறது.

## 10.8 ஒரே சுகாதார அணுகுமுறை

ஒரே சுகாதார அணுகுமுறையானது, மக்கள், விலங்குகள் மற்றும் சுற்றுச் சூழலுக்குகேற்ற ஆரோக்கியத்தைப் பெறுவதற்கு உள்நாட்டிலும்,

தேசிய அளவிலும், உலக அளவிலும் பணிபுரியும் பல துறைகளின் கூட்டு முயற்சியாகும்.

புருசெல்லோசிஸ், லெப்டோஸ்பிரோசிஸ், பசுவின காசநோய் போன்ற தொற்று நோய்கள் பசுவினங்கள் மற்றும் பால் தயாரிப்புகளை கையாளுபவர்கள் மூலம் பரவும் ஒருவித விலங்குகளிடமிருந்து மனிதனுக்கு பரவும் நோய்களைக் கட்டுப்படுத்த இந்த அணுகுமுறை உதவுகிறது.

## 11. முக்கிய உட்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்பங்களை சார்ந்த திட்டங்கள்

### 11.1. அதிவெப்ப நிலையில் (UHT) பால் பதப்படுத்தும் ஆலை, சோழிங்கநல்லூர் பால் பண்ணை

உயர் வெப்ப நிலையில் 135 டிகிரி செல்சியஸ்க்கு மேல் சூடேற்றப்பட்ட பால் நுண்ணுயிரிகளற்ற சூழ்நிலையில் சிப்பம் கட்டப்படும். இவ்வாறு தயாரிக்கப்பட்ட பால் பாக்கெட்டுகள் சாதாரண அறை வெப்ப நிலையில் 90 நாட்கள் வரை இருப்பு வைத்திருக்கலாம்.



### 11.2. பால்பண்ணைகளில் மரபு சாரா எரிபொருள் பயன்பாடு

தற்போது, நாளொன்றுக்கு 1.11 இலட்சம் லிட்டர் சூடான நீரை (80°C) உற்பத்தி செய்ய சூரிய நீர்சூடாக்கிகள் 8 பால்பண்ணைகள், 4 குளிர்விக்கும் மையங்கள் மற்றும் 100 மொத்த பால் குளிர்விப்பான்களில் நிறுவப்பட்டுள்ளன. மேலும், உலை எண்ணெய் செலவினை சேமிக்க சோழிங்கநல்லூர் மற்றும் சேலம் பால் பண்ணைகளில் பரவளைய செறிவூட்டிய சூரிய வெப்ப அமைப்பை நிறுவியுள்ளது. பகல் நேரங்களில் பால் பண்ணை இயக்கிட ஒரு சூரிய வெப்ப அமைப்பு திட்டம் மதுரை பால்பண்ணையில் ரூ.2.00 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ளது. மேலும், மதுரையில் ரூ.10.50 கோடி மதிப்பீட்டில் 2 மெகா வாட் சூரிய ஒளி மின் உற்பத்தி ஆலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

## 11.3. ஒருங்கிணைந்த பால்பண்ணை மேலாண்மை திட்டம் (IDMS)

பால் கூட்டுறவுத் துறை டிஜிட்டல் இந்தியாவின் ஒரு பகுதியாக இருக்க உதவும் பொருட்டு, தமிழக அரசு "ஐடிஎம்எஸ்" திட்டம் என்று அழைக்கப்படும் மின்–ஆளுமை திட்ட முயற்சியை மேற்கொண்டுள்ளது. ஐ.டி.எம்.எஸ் திட்டம் கிராம அளவிலான பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் ஆகியவற்றின் அனைத்து நடவடிக்கைகளையும் கணினி மயமாக்கல் மற்றும் தானியங்கி மயமாக்கலுக்கு உதவுகிறது. முதல் கட்டமாக, இந்த "ஐடிஎம்எஸ்" திட்டம் 300 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், 4 சமன்படுத்தப்பட்ட பால்பண்ணைகள் மற்றும் இணையம் ஆகியவற்றில் ரூ.46.55 கோடி செலவில் அனைத்து வணிக செயல்பாடுகளும் டிசம்பர் 2019 வரையரை செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டு



வருகிறது. இத்திட்டத்திற்கு 100% மானிய உதவியாக ஒன்றிய அரசு ரூ.18.34 கோடியை வழங்கியுள்ளது.

மேற்குறிப்பிட்ட அனைத்து அலகுகளிலும் இத்திட்டம் 31.12.2019 முடிக்கப்பட்டு 01.01.2020 முதல் 30.10.2020 வரை மென்பொருள் உறுதிதன்மை பலப்படுத்தப்பட்டு 01.11.2020 முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

## 11.4. மொத்த பால் குளிர்விப்பான்களை நிறுவுதல்

தூய பால் உற்பத்தியின் தொடக்கமாக, குளிரூட்டல் வசதியுடன் கூடிய பால் குளிர்விப்பான்கள் பால் சேகரிப்பு மையங்கள் மற்றும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் நிறுவப்பட்டு, பாலின் ஆரம்ப தரத்தை தக்க வைத்திருக்க பாலை குளிர்விக்க உதவுகின்றன. எனவே, மொத்த பால் குளிர்விப்பான்களை நிறுவுவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

பல்வேறு ஒன்றிய / மாநில அரசு திட்டங்களின் கீழ் 500, 1,000, 2,000, 3,000 மற்றும் 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மொத்த பால் குளிர்விப்பான்கள், 5 முதல் 10 கி.மீ சுற்றளவில் செயல்படும் சங்கத்தின் (அல்லது) கிளை சங்கங்களின் சராசரி மொத்த பால் கொள்முதல் அளவு ஆகியவற்றை கருத்தில் கொண்டு நிறுவப்படுகின்றன.

இதுவரை, நாளொன்றுக்கு 21.95 இலட்சம் லிட்டர் குளிரூட்டும் திறன் கொண்ட 626 மொத்த பால் குளிர்விப்பான்கள் பல்வேறு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் நிறுவப்பட்டுள்ளன.



## 12. ஒன்றியங்கள் & இணையத்தின் விற்பனை வருவாய்

(ரூ.கோடியில்)

| வ. எண். | வருடம் | மொத்த விற்பனை வருவாய் | ஒன்றியங்களின் விற்பனை வருவாய் | இணையத்தின் விற்பனை வருவாய் |
|---|---|---|---|---|
| 1 | 2016-17 | 5281.00 | 3528.56 | 1752.44 |
| 2 | 2017-18 | 5478.00 | 3618.34 | 1859.66 |
| 3 | 2018-19 | 5994.00 | 3976.14 | 2017.86 |
| 4 | 2019-20 | 6947.45 | 4763.35 | 2184.10 |
| 5 | 2020-21 | 7595.72 | 5269.92 | 2325.80 |
| 6 | 2021-22 (தோரயமாக) | 7887.00 | 5448.00 | 2439.00 |

2020–21 ஆம் ஆண்டு ரூ.7595.72 கோடியாக இருந்த ஒன்றியங்கள் & இணையத்தின் விற்பனை வருவாய், 2021–22 ஆம் ஆண்டு ரூ.7887.00 கோடியாக உயர்ந்துள்ளது.

## 13. பல்வேறு அரசுத் துறைகளுடனான ஒருங்கிணைப்பு

பால்வளத் துறையானது, வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் போன்ற பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் மற்றும் பொது சுகாதாரத்துறை போன்ற துறைகளுடன் ஒருங்கிணைந்து பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

## 14. பணியாளர் நலன் சார்ந்த நடவடிக்கைகள்

1. 2021–22 ஆம் வருடத்தில், ஆறு ஒன்றிய ஊழியர்களுக்கும், 159 இணைய பணியாளர்களுக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டது.

2. பால்வளத்துறையில் 2 நபர்கள், கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் 20



பணியாளர்கள் மற்றும் இணையத்தில் 80 நபர்களும் பணியமர்த்தப்பட்டனர்.

3. கருணை அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்டவர்களின் விவரங்கள் கீழ்க்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| நிறுவனத்தின் பெயர் | வருடம் | பணியமர்த்தப் பட்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| பால்வளத்துறை | 2020 | 1 |
| | 2021 | 2 |
| ஒன்றியங்கள் | 2020 | 5 |
| | 2021 | 1 |
| இணையம் | 2020 | 4 |
| | 2021 | 50 |

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பால்வளத்துறையில் பணிபுரிந்து கொரோனா பெருந்தொற்று காரணமாக உயிரிழந்த பணியாளர் ஒருவரின் வாரிசுக்கும், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தில் பணிக்காலத்தில் உயிரிழந்த

47 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கும் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணையினை 21.08.2021 அன்று வழங்கினார்கள்.

4. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மற்றும் இணையத்தின் பணியாளர்கள் மற்றும் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கும் தினந்தோறும் அரை லிட்டர் பால் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

5. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மற்றும் இணையத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.4,000 ஓய்வூதியத் தொகையாகவும் மற்றும் இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை குடும்ப ஓய்வூதியமாக ரூ.2,000 வழங்கப்பட்டு வருகிறது.



6. பணியாளர்கள் பயன்பெறும் பொருட்டு பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு, அவை முறையே, பெங்களூருவில் செயல்பட்டு வரும் தேசிய பால்வள நிறுவனத்திலும், ஆனந்தில் செயல்பட்டு வரும் ஊரக வளர்ச்சி மேலாண்மை நிலையத்திலும், சென்னையில் நடேசன் கூட்டுறவு மேலாண்மை நிலையம் மற்றும் அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையம் ஆகியவற்றிலும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இணையத்தில் புதிதாக பணியில் சேர்ந்த அமைச்சுப் பணியாளர்களுக்கு ஈரோடு மாவட்டத்தில் உள்ள பவானிசாகர் அரசுப் பணியாளர் பயிற்சி நிலையத்தில் உரிய அடிப்படை பயிற்சி அளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

7. 2021–22–ம் ஆண்டு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் பணியாளர்களுக்கு ரூ. 29.24 இலட்சமும் மற்றும் இணையத்தின் பணியாளர்களுக்கு

ரூ. 12.76 இலட்சமும் உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

8. 2021 ஆம் ஆண்டு தீபாவளி பண்டிகையின் போது கருணைத் தொகையாக ரூ.193.14 இலட்சம் இணையத்தின் 2,509 பணியாளர்களுக்கும், ரூ.186.45 இலட்சம் 25 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் 2,508 பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

9. 2021–ம் ஆண்டு தீபாவளி பண்டிகையையொட்டி இணையத்தின் 1,327 பணியாளர்களுக்கு ரூ.12.54 இலட்சம் மதிப்பிலான பால் உபபொருட்களும், ஓய்வு பெற்ற 2,170 பணியாளர்களுக்கு ரூ.4.55 இலட்சம் மதிப்பிலான பால் பொருட்களும் தீபாவளி பரிசாக வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் 2,972 பணியாளர்களுக்கு



ரூ.25.27 இலட்சம் மதிப்பிலான பால் பொருட்களும், ஓய்வு பெற்ற 2,781 பணியாளர்களுக்கு ரூ.5.74 இலட்சம் மதிப்பிலான பால் பொருட்களும் தீபாவளி பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

10. 2021–2022 நிதியாண்டில் பொங்கல் பண்டிகையையொட்டி இணையத்தின் 1,325 பணியாளர்களுக்கு ரூ.8.67 இலட்சம் மதிப்பிலான பால் பொருட்களும் ஓய்வு பெற்ற 1,975 பணியாளர்களுக்கு ரூ.5.23 இலட்சம் மதிப்பிலான பால் உபபொருட்களும் பொங்கல் பரிசாக வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் 2,964 பணியாளர்களுக்கு ரூ.19.40 இலட்சம் மதிப்பிலான பால் உபபொருட்களும் ஓய்வு பெற்ற 2,809 பணியாளர்களுக்கு ரூ.7.34 இலட்சம் மதிப்பிலான பால் பொருட்களும் பொங்கல் பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

## 15. பால் உற்பத்தியாளர்களுக்கு அளிக்கப்படும் சேவைகள்

### 15.1 மாற்றியமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் நல நிதி

- பால் உற்பத்தியாளர்களின் விசுவாசத்தினை ஊக்குவித்து தக்க வைக்கும் வண்ணமாகவும் அவர்களது சேவையை மதிப்பளிக்கும் வண்ணமாகவும் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் நலநிதி உருவாக்கப்பட்டு அதில் மாதந்தோறும் பால் ஊற்றும் பால் உற்பத்தியாளர்களின் பங்களிப்பாக ரூ.1–ம், தொடர்புடைய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் பங்களிப்பாக தலா 0.50 பைசாவும் (ஆக மொத்தம் ரூ.2/–) பெறப்படுகிறது.

- விபத்தில் இறந்த பால் உற்பத்தியாளர்களின் வாரிசுதாரர்கள் மற்றும் விபத்தில் நிரந்தர



ஊனமுற்ற சந்தாதாரர்களுக்கு இந்த நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது

- உறுப்பினர்களுக்கு காப்பீட்டு அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது, தமிழக அரசு பால் உற்பத்தியாளர்களுக்கு, விபத்து அல்லது நிரந்திர ஊனம் ஏற்படும்போது வழங்கப்படும் உதவித் தொகையினை ரூ.1.75 இலட்சத்திலிருந்து ரூ.2.50 இலட்சமாக 12.11.2019 முதல் உயர்த்தி உள்ளது. விபத்தில் இறந்த பால் உற்பத்தியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை விபரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | நிதி உதவி | நிதி |
|---|---|---|
| 1 | கல்விக்காக | ரூ.25,000 |
| 2 | திருமணத்திற்காக | ரூ.30,000 |
| 3 | இறுதி சடங்கு செலவினங்களுக்காக | ரூ.5,000 |

இதுவரை 193 பயனாளிகளுக்கு ரூ.377.30 இலட்சம் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் தற்சமயம் ரூ.708.71 இலட்சம் இருப்பில் உள்ளது.

**15.2 பிரதம பால் உற்பத்தியளார்கள் கூட்டுறவு சங்கங்களின் மூலம் தாது உப்பு கலவை விற்பனை செய்யும் ஊழியர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குதல்.**

பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியும் ஊழியர்களை ஊக்குவிக்கவும், தாது உப்பு கலவை விற்பனையை ஊக்குவிக்கவும், சங்க ஊழியர்களுக்கு அவர்கள் விற்கும் தாது உப்பு கலவைக்கு ஒரு கிலோவுக்கு ரூ.10 ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. 2021–22 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.85.11 இலட்சம் தாது உப்பு கலவை விற்பனைக்கான ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது.



**15.3 பால் உற்பத்தியாளர்களுக்கு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மூலமாக ஊக்கத் தொகை வழங்குதல்.**

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களை போன்றே, மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களால் ஈட்டப்பட்ட இலாப தொகையில் ஒரு பகுதியானது பால் உற்பத்தியாளர்களுக்கு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக அந்த பால் ஊற்றும் உறுப்பினர்களின் பால் ஊற்றும் அளவின் அடிப்படையில் ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, 2019–2020 ஆம் ஆண்டில் ரூ.291.79 இலட்சம் ஊக்கத் தொகையானது கன்னியாகுமரி மற்றும் மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் மூலமாக 1,317 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களைச் சார்ந்த

30,268 பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**15.4 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் பால் உற்பத்தியாளர்களுக்கு போனஸ் வழங்குதல்**

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் இலாபத்தினை சங்க உறுப்பினர்களுடன் பங்கீடு செய்யும் அளவீடாக, 50 சதவீத இலாபத் தொகையானது பால் உற்பத்தியாளர்களுக்கு, பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் துணை விதியின்படி பங்குத் தொகை மற்றும் பங்கு ஈவுத் தொகை, ஆதரவு தள்ளுபடி விலை மற்றும் போனசாக பால் உற்பத்தியாளர்கள் வழங்கும் பாலின் அளவீட்டிற்கு தக்கவாறு வழங்கப்பட்டு வருகிறது.

2020-21 ஆம் ஆண்டில் ரூ.1,111.70 இலட்சம் போனசாகவும், ரூ.9.86 இலட்சம் பங்கு ஈவுத் தொகையாகவும், ரூ.1,488.74 இலட்சம்



ஆதரவு தள்ளுபடி விலையாகவும், 2.48 இலட்சம் சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**15.5 பால் உற்பத்தியாளர்களுக்கு கால்நடை உள்ளீட்டு சேவைகள்**

தமிழகத்தில் கூட்டுறவு அமைப்பின் கீழ் பெரும்பாலானவை கலப்பின ஜெர்சி பசுக்கள் ஆகும். அவை ஒவ்வொன்றும் சராசரியாக நாளொன்றுக்கு 6.80 லிட்டர் பால் வழங்கி வருகின்றன. தற்போது பால் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு, உயர் மரபு திறன் உள்ள காளைகளிடமிருந்து பெறப்படும் விந்தணு கொண்டு தயாரிக்கப்பட்ட உறைவிந்து குச்சிகள் மூலம் செயற்கை முறை கருவூட்டல் மேற்கொள்ளப்படுகிறது.

இத்துறை மூலம் கீழ்க்காணும் உள்ளீட்டுச் சேவைகள் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

- கால்நடை சிகிச்சை மற்றும் அவசர கால சிகிச்சை
- உயர் மரபியல் திறன் கொண்ட உறைவிந்து குச்சிகளை கொண்டு செயற்கைமுறை கருவூட்டல் சேவைகள்
- மலட்டு நீக்க சிகிச்சை முகாம்
- கறவையின காப்பீடு
- பால் உற்பத்தியாளர்கள் மற்றும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க பணியாளர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி.
- தரமான கால் நடை தீவனம் மற்றும் தாது உப்பு கலவை வழங்குதல்
- தரமான தீவன புல் மற்றும் விதைகளை பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்குதல்
- பால் உற்பத்தியாளர்களுக்கு வங்கிகள் மூலம் நடைமுறை மூலதன கடன் வழங்குதல்

## 15.6 பால் உற்பத்தியாளர்களுக்கான பயிற்சிகள்

பால் உற்பத்தியாளர்களுக்கு, தூய முறையில் பால் உற்பத்தி, சமச்சீர் தீவனம் வழங்கும் முறைகள்,



வருடம் ஒரு கன்று திட்டம், தீவன பயிர் வளர்ப்பு, கறவை பசு வளர்ப்பு மேலாண்மை, பால் உற்பத்தி செலவை குறைத்தல் மற்றும் மாற்று தீவன பயன்பாடு போன்ற தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

## 15.7 மாவட்ட ஒன்றிய பயிற்சி நிலையங்கள்

ஒன்றிய அரசின் கண்காணிப்பு பயிற்சி நிலைய குழுவால் அங்கீகாரம் பெற்ற பயிற்சி நிலையங்கள், சேலம், மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையங்களில் ஒன்றிய அரசு மற்றும் விவசாய அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பல்வேறு பயிற்சி வகுப்புகள் பால் உற்பத்தியாளர்கள் பயன் பெறும் வகையில் நடைபெறுகிறது.

விழுப்புரம், வேலூர் மற்றும் மாதவரத்தில் அமைந்துள்ள பயிற்சி மையங்களை வலுபடுத்துவதற்கான திட்ட முன்மொழிவுகள்

ரூபாய் 572.25 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை மூலம் இராஷ்டிரிய கோகுல் மிஷன் திட்டத்தின் கீழ் 100% மானியம் உதவியைப் பெற ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மாதவரம் பயிற்சி மையம், அனைத்து மாவட்ட ஒன்றியங்கள், இணைய பணியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப ஊழியர்களின் திறனை மேம்படுத்த பயிற்சி அளிப்பதற்காக தொடங்கப்படவுள்ளது.

### 15.8 ஆவின் மற்றும் இஃப்கோ– கிசான் நிறுவனம் இணைந்து வழங்கும் பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில் இலவச ஆலோசனை சேவைகள்

ஆவின் மற்றும் இஃப்கோ கிசான் நிறுவனம் இணைந்து பால் உற்பத்தியாளர்களுக்கு கைபேசி வழியாக குரல் வழி செய்திகள் மற்றும் குறுஞ்செய்திகள் மூலம் இலவச ஆலோசனை சேவைகளை வழங்கி வருகிறது. இவ்வாலோசனை சேவைகள் மூலம் பால் உற்பத்தியாளர்களின்



கறவைகளை தாக்கும் நோய்கள், நோய் தடுப்பு முறைகள், கால்நடை வளர்ப்பு, தீவன முறைகள், விஞ்ஞான முறையில் பால் கறவை செய்தல், கறவைகளில் இனவிருத்தி ஆகியவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

### 15.9 பசுந்தீவன வளர்ப்பு

பால் உற்பத்தியாளர்களுக்கு தேவையான புல் கரணைகள் மற்றும் விதைகளை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மூலம் வழங்கப்படுகிறது. இப்பசுந்தீவன விதைகள் மற்றும் கரணைகளை வழங்குவதன் மூலம் பால் உற்பத்திச் செலவு குறைவதுடன், பாலில் கொழுப்புச் சத்து அதிகரிக்கிறது.

மேலும், ஆவின் நிறுவனம், தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம் (TANUVAS) மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் (TNAU), கோயம்புத்தூர் இணைந்து தீவன மேம்பாட்டு நடவடிக்கைகள், தீவனப் பயிர்களைப் பாதுகாத்தல் போன்ற நவீன விஞ்ஞான முறைகள்

குறித்து மாவட்ட ஒன்றிய ஊழியர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளது.

**16. பால்வளத் துறையின் எதிர்கால திட்டங்கள்**

1. பதப்படுத்தப்பட்ட பால் விற்பனையில் வருடம் 10 சதவீதம் வளர்ச்சி அடைவதை நோக்கமாகக் கொண்டு, விற்பனை செய்யப்படும் பால் அளவினை நாளொன்றுக்கு 30.00 இலட்சம் லிட்டராக உயர்த்துவது.
2. தமிழ்நாடு மொத்த பால் கொள்முதலில், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் கொள்முதல் 17.6 சதவீதமாக உள்ள நிலையில் அதனை 25 சதவீதமாக உயர்த்துவதற்கு அமைப்புசாரா துறைகளில் உள்ள பால் உற்பத்தியாளர்களை கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.
3. தற்போதைய ஆவின் நிறுவனத்தின் சந்தை மதிப்பை கூட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.



4. உள்ளூர் சந்தையில், பால் பொருட்கள் விற்பனையில் 10 சதவீதம் வளர்ச்சி அடைவதை நோக்கமாகக் கொண்டு தற்போதுள்ள பால் பொருட்கள் விற்பனை அளவான மாதந்தோறும் ரூ.45 கோடியிலிருந்து ரூ.50 கோடியாக உயர்த்துவது (மாவட்டங்கள் மற்றும் இணையத்தில்).
5. இந்த நிதியாண்டின் இறுதிக்குள் 200 புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களை உருவாக்குதல் மற்றும் 200 எண்ணிக்கையிலான செயல்படாத / செயலற்ற சங்கங்களை ஒரு வருடத்திற்குள் செயல்படும் சங்கங்களாக மாற்றுதல்.
6. அடுத்த ஐந்து ஆண்டுகளில், ஒரு கறவை மாட்டிலிருந்து பெறப்படும் பாலின் அளவை நாளொன்றுக்கு தற்போதுள்ள 6.80 லிட்டரிலிருந்து 7.02 லிட்டராக உயர்த்துவது.
7. டிஜிட்டல் முயற்சிகளை வலுப்படுத்தி இணைய வழி மூலம் நுகர்வோர்களை

24x7 சேவை செய்து பால் மற்றும் பால் பொருட்களின் விற்பனையை அதிகரிக்க செய்வது.

8. பாலில் போக்குவரத்து காரணமான இழப்புகளை தவிர்த்தல் மூலம் கூடுதல் இலாபத்தினை உறுதி செய்தல்.

9. கறவை மாடுகளுக்கான தீவனம் மற்றும் பிற அத்தியாவசிய உள்ளீடுகள் கிடைப்பதை உறுதி செய்தல்.

10. செயற்கை கருவூட்டல் மூலம் கருத்தரித்தல் விகிதம் 43 சதவிகிதத்தில் இருந்து 48.50 சதவிகிதமாக உயர்த்துதல்.

11. கால்நடை நலனை துறையின் முக்கிய நோக்கமாக கொண்டு கால்நடைகளை 100 சதவீதம் தொற்று நோய்களிலிருந்து குறிப்பாக கோமாரி நோயிலிருந்து பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

12. சூரிய ஆற்றல் சக்தி மற்றும் மேகக் கணினி சார்ந்த தொலைநிலை கண்காணிப்பு அமைப்பு போன்ற புதுமையான அணுகு முறைகளைக் கொண்டு கூட்டுறவு பால்பண்ணை தொழிலை வலுப்பெறச் செய்தல்.



13. பால் உற்பத்தியாளர்களின் திறன் வளர்க்கும் முயற்சியாக சுத்தமான முறையில் பால் உற்பத்தி, விஞ்ஞான முறையில் கறவை மாடுகளை பராமரித்தல் போன்ற பயிற்சிகளை அளிப்பது மூலம் பால்பண்ணையின் இலாபத்தினை அதிகரிக்க செய்வது மற்றும் பால் உற்பத்தியாளர்கள் வாழ்வாதாரத்தினை மேம்பாடு அடைய செய்வது.

14. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்துடன் வலுவான இணைப்பினை உருவாக்கி, பல்கலைக்கழகத்தின் பால் மற்றும் பால் பொருட்கள் சம்பந்தமான ஆராய்ச்சி முடிவுகளை ஆவின் நிறுவனம் நுகர்வோர்களின் நலனுக்காக பயன்படுத்துவது.

15. சந்தை நுண்ணறிவினை வலுப்படுத்த தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தோடு இணைந்து பகுதிவாரியாக நுகர்வோர்களின் விருப்பங்கள்,

சுவை, தேர்வினை மதிப்பீடு செய்து நுகர்வோர்கள் விரும்புகின்ற பால் மற்றும் பால் பொருட்களை தயாரித்து வழங்குவது மூலம் நுகர்வோர்களை திருப்தி செய்ய முடியும். இதன் மூலம் விற்பனை அதிகரிப்பதோடு கூட்டுறவு பால் பண்ணைகளின் நம்பகத் தன்மையினை உயர்த்த முடியும்.

16. அதிகமான எண்ணிக்கையில் பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளுக்கு காப்பீடு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### 16.1 நிர்வாக சீர்திருத்தங்கள்

- செயலிழந்த சங்கங்களை புதுப்பித்தல். இதன் மூலம் கூடுதலாக பால் உற்பத்தியாளர்கள் ஆவின் நிறுவனத்திற்கு பால் வழங்குவார்கள். பால் கொள்முதலும் அதிகரிக்கும்
- பால் உற்பத்தியாளர்களுக்கு மாதந்தோறும் குறை தீர்க்கும் கூட்டம் நடத்துதல்



- புதிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் உருவாக்க ஆய்வு மேற்கொள்ளுதல்
- ஆவின் நிறுவனத்தின் பதவியிடங்கள் அரசு ஆணை பெற்று தமிழ்நாடு தேர்வாணையம் (TNPSC) மூலமாக தேர்வு செய்தல் போன்றவை மேற்கொள்ளப்படும்

### 16.2 ஒழுங்குமுறை விதிகளை செயல்படுத்துவதில் உள்ள சிரமங்களை குறைத்தல் மற்றும் மின்னணு நிர்வாக செயல்பாடுகளின் மூலம் வணிகம் சம்பந்தப்பட்ட செயல்பாடுகளை சுலபமாக்குதல்.

பொருளாதாரத்தில் போட்டியிடும் திறனை மேம்படுத்துதல், தமிழ்நாடு அரசின் மூன்று நிலைகளில் ஒரு பணி நிரலாக உள்ளது. பால்வளம் சம்பந்தப்பட்ட செயல்பாடுகளில் ஒழுங்குமுறை விதிகளை எளிமையாகவும் திறம்படவும்

செயல்படுத்தப்படுவதும் நிரலில் ஒரு முக்கிய அம்சமாக உள்ளது.

அதனடிப்படையில், இது குறித்து முன்னரே பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ள சூழலில் இதனை செயலாக்கம் செய்வதில் கீழ்க்கண்டவை நடைமுறைப்படுத்தப்பட உள்ளன.

- மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் செயல்படும் பால் பண்ணைகள் மற்றும் தொகுப்பு பால் குளிர்விப்பான்கள் ஆகியவை அமைப்பதற்கு இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் உரிமம் பெறப்படுகிறது. இவை அனைத்திற்கும் தனித்தனியாக இல்லாமல் ஒட்டு மொத்தமாக அந்தந்த மாவட்ட ஒன்றியத்தில் ஒரே உரிமமாக பெறப்படுவதன் மூலம் நேரம் மற்றும் நிதி சேமிப்பு ஆகியவற்றிற்கு ஏதுவாக அமையும் வகையில் நடைமுறைப்படுத்தப்படும்



- வருடாந்திர அடிப்படையில் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் உரிமம் புதுப்பிக்கப்படுவதற்கு பதிலாக ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கும் வழிமுறை பின்பற்றப்படும்

கூட்டுறவு பால் பண்ணை தொழில் துறையில் வாணிப நடவடிக்கைகளை எளிதாக்கும் பொருட்டு கீழ்க்கண்ட புதிய முயற்சிகள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன.

- இணைய வழியில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களை பதிவு செய்தல்
- இணைய வழியில் பால் உற்பத்தியாளர்கள் மற்றும் ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் நுகர்வோர்களின் குறைகள் நிவர்த்தி செய்தல்
- பால் கூட்டுறவு சங்கங்களில் பால் பரிசோதனை வசதிகள், தானியங்கி பால்

சேகர அலகுகள் (AMCU) நிறுவப்படுவதன் மூலம் மேம்படுத்தப்படும். இதன்மூலம் செயல்முறை எளிதாக்கப்படுவதுடன் பால் கொள்முதல் மற்றும் உறுப்பினர்களுக்கு பால் பணப்பட்டுவாடா வெளிப்படைத் தன்மை உடையதாக அமையும்

- கூட்டுறவு சங்கங்களில் பால் உற்பத்தியாளர்கள் பால் வழங்கும் போது பாலின் தரம், அளவு மற்றும் அதன் மதிப்பு குறித்து உடனடி பால் மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு அவர்களுக்கு ஒப்புகை சீட்டு வழங்கப்படும்
- பால் உற்பத்தியாளர்களுக்கு மின்னணு வாயிலாக பணப்பட்டுவாடா
- நல்லமுறையில் கறவை மாடுகளை பராமரிக்கவும், பால் உற்பத்தி செலவினை குறைக்கின்ற தொழில்நுட்ப அறிவினை குரல் ஒலி (Voice Message) மற்றும் குறுஞ்செய்திகள் (SMS) மூலம் பால் உற்பத்தியாளர்களுக்கு அனுப்ப



நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது

- இணைய வழி மூலமாக பால் அட்டை விற்பனை செய்தல்
- பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனையை அதிகரிக்க ஆவின் நுகர்வோர்களை நியமனம் செய்ய ஒற்றை சாளரமுறை நடைமுறைப் படுத்தப்படும்
- ஆவின் முகவர்களுடைய உரிமம் இணைய வழியில் புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்
- இந்திய தேசிய கூட்டுறவு பால் பண்ணை அமைப்பின் மூலம் மின்னணு முறையில் பால்பவுடர், வெண்ணெய் போன்ற பால் பொருட்களின் விற்பனையை மேற்கொள்வதை போன்றே இதர பால் பொருட்களையும் இவ்வமைப்பின் மூலம் விற்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

- அனைத்து பாலகங்களிலும் பால் பொருட்களை விற்பனை செய்வதற்கான இரசீது வழங்கப்படும்
- சுற்றுப்புறச்சூழல் நிலையினை கருத்தில் கொண்டு காகிதம் இல்லாத முறையில் விற்பனை இரசீதினை நுகர்வோர்களின் கைபேசிக்கு நேரடியாக அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்
- நேரம் மற்றும் எழுது பொருள் சேமிப்பிற்கு ஏதுவாக அலுவலர்களுக்கு முக அடையாளம் கருவி மூலம் வருகை பதிவேடு பராமரிக்கப்படும்
- அனைத்து பால்பண்ணைகளிலும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு கண்காணிப்பு மேம்படுத்தப்படும்
- பால் மற்றும் பால் பொருட்களின் தொடர் வினியோகத்தை கருத்தில் கொண்டு போக்குவரத்து செலவு மற்றும் நேரத்தை சிக்கனமாக்க, விநியோக இடங்கள் குறியீடு (Mapping) செய்யப்படும்



- இணையம் மற்றும் ஒன்றியங்களில் "மின்னணு அலுவலகம்" (e–office) முறையில் கோப்புகள் கையாளும் முறை நடைமுறைப்படுத்தப்படும்
- தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளி இணையதளத்தில், ஆவினுக்காக பிரத்தியேக இணையவழி மூலம் முன்வைப்புத் தொகை (EMD) செலுத்தும் வசதி உருவாக்கப்படும்

## 16.3 நிலையான அபிவிருத்திக்கான நோக்கங்கள்

2015–ம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் சபையின் அனைத்து உறுப்பு நாடுகளும் ஏற்றுக் கொண்ட 2030ஆம் ஆண்டிற்குள் செய்யப்படவேண்டிய வளர்ச்சி குறித்த இலக்குகள் பற்றிய முன்மொழிவுகள், தற்போதும் எதிர் காலத்திலும், மக்களுக்கும் அனைத்து உலக நாடுகளுக்கும் அமைதி மற்றும் செழிப்புக்கான பகிரப்பட்ட வரைபடத்தை வழங்குகிறது. வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளுக்கு 17 குறிக்கோள்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

பால்வளத்துறையானது, வளங்குன்றா வளர்ச்சி குறிக்கோள் எண்.2.0ன்படி பட்டினியை ஒழித்தல், உணவு பாதுகாப்பை அடைதல், ஊட்டச்சத்து மேம்பாட்டை எய்துதல் மற்றும் நிலையான வளங்குன்றா வேளாண்மையை ஊக்குவித்தல் ஆகியவற்றோடு தொடர்புடையதாகும். மேலும், இத்துறையானது, இலக்கு எண்.2.3 மற்றும 2.அ அடைவதற்கு திட்டமிட்டுள்ளது.

குறிக்கோள் 2.3 2030–ஆம் ஆண்டிற்குள் கிராமப்புறங்களில் சிறிய அளவில் உணவு உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் குறிப்பாக பெண்கள், பழங்குடியினர், விவசாயத் தொழிலையே வாழ்வாதாரமாக செய்கின்ற குடும்ப உறுப்பினர்கள் மற்றும் கறவை மாடுகள் வளர்ப்போருக்கு தங்களுடைய வருட வருமானத்தை இரட்டிப்பாக்கும் நோக்கத்துடன் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப அறிவு, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற அனைத்து பொருட்களையும் சந்தைப்படுத்துவதற்கு வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகும். மேலும்,



மதிப்பு கூட்டிய பொருட்கள் உற்பத்திக்கு தேவையான வசதிகளை அதிகரித்தல் மூலம் கிராமப்புறங்களில் விவசாயம் சார்ந்த வேலை வாய்ப்புகள் உருவாக்குதல் ஆகும்.

குறிக்கோள் 2(அ): வளரும் நாடுகளில் மற்றும் குறிப்பாக குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளில் விவசாய உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக கிராமப்புற உட்கட்டமைப்பு, விவசாய ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க பணிகள், விவசாய பயிர்கள் மற்றும் கால்நடை மரபணு வங்கிகளில் மேம்பட்ட சர்வதேச ஒத்துழைப்பு மூலம் முதலீட்டை அதிகரித்தல்.

இத்துறையானது, அரசாணை (நிலை) எண்.184, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை, நாள். 26.12.2019–ன்படி வளங்குன்றா வளர்ச்சித் திட்டங்களை எய்துவதற்காக குழு ஒன்றை அமைத்துள்ளது. இக்குழுவானது, திட்டமிடல் மற்றும் மேம்பாட்டு துறை, மாநில மற்றும் மாவட்ட களப் பணியாளர்கள் மற்றும் இதர வளங்குன்றா வளர்ச்சித் திட்ட

குழுக்களுடன் இணைந்து செயல்படும். இவ்வாறாக பல்வேறு திட்டங்கள் மூலம் பால்வளத்துறையானது, வளர்ச்சி திட்டங்களை எய்த திட்டமிட்டுள்ளது.

## 16.4 இலக்குகளை அடைவதற்கான வருடாந்திர செயல்திட்டம்

- கூட்டுறவு அமைப்பின் கீழ் அதிக அளவிலான பால் உற்பத்தியாளர்களை கொண்டு வருதல்
- 'ஒரு வருடத்திற்கு ஒரு கன்று' என்ற இலக்கை அடைதல்
- சமச்சீர் தீவன முறையை நடைமுறைப் படுத்துதல்
- கறவை மாட்டுக் கடன்கள் வழங்குவதன் மூலம் கறவை மாடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்தல்
- கறவை மாடுகளுக்கான காப்பீட்டுத் திட்டத்தினை விரிவான முறையில் நடைமுறைப்படுத்துதல்



- பால் உற்பத்தியாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்குதல்
- தூய பால் உற்பத்தி செய்வது தொடர்பாக பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களில் உள்ள பால் உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி வழங்குதல்
- சங்கங்களில் தானியங்கி பால் கொள்முதல் நிலையத்துடன் கூடிய தொகுப்பு பால் குளிர்விப்பான்களை அதிக எண்ணிக்கையில் நிறுவுதல்
- அனைத்து நிலைகளிலும் பாலின் குளிர்நிலையை பராமரித்து பாலின் ஆரம்ப தரத்தை உறுதி செய்தல்
- அதிகரித்து வரும் பால் உற்பத்தியை எதிர்கொள்ள அனைத்து பால் பண்ணைகளின் கையாளும் திறனை அதிகரித்து கூடுதலான வசதிகளை உருவாக்குதல்
- ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசுகளிடமிருந்து பல்வேறு திட்டங்கள் வாயிலாக பெறப்படும் நிதியினை

பயன்படுத்தி அவற்றை செயல்படுத்துவதன் மூலம் பால் உற்பத்தியை பெருக்குதல்

**17. பால் கூட்டுறவு அமைப்புகளுக்கான தேர்தல்**

தமிழகத்தில் கூட்டுறவு சங்கங்களுக்கு நிர்வாகக்குழு தேர்தலினை, மக்களாட்சி முறையில் நடத்திட ஏதுவாக தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் தேர்தல் ஆணையம் என சட்ட அமைப்பு 2012ல் ஏற்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து அனைத்து வகை கூட்டுறவு சங்கங்களுக்கும் நிர்வாகக்குழு தேர்தல் மேற்படி ஆணையத்தால் 2013 முதல் நடத்தப்பட்டு வருகிறது.

பால் கூட்டுறவுகளின் மூன்றடுக்கு அமைப்பில் உள்ள பால் கூட்டுறவு சங்கங்கள், அந்தந்த சங்கங்களின் தகுதி வாய்ந்த உறுப்பினர்களால் மக்களாட்சி முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக குழுவால் நிர்வகிக்கப்படுகிறது.



1983–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகள் 1988–ல் தெரிவித்துள்ள வழிவகைகளின்படி, நிர்வாகக்குழுவில் மகளிர் மற்றும் ஆதி திராவிடர்களுக்கு என இட ஒதுக்கீடு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதர கூட்டுறவு சங்கங்களை போல் அல்லாது, பால் கூட்டுறவு சங்க நிர்வாக குழு உறுப்பினருக்கான தேர்தலில் பால் ஊற்றும் உறுப்பினர்கள் மட்டுமே போட்டியிடவும், வாக்களிக்கவும் முடியுமென்பதால், மற்ற கூட்டுறவுகளிலிருந்து பால் கூட்டுறவு தனித்துவத்துடன் செயல்பட்டு வருகிறது.

ஏப்ரல் 2018 உடன் முந்தைய நிர்வாக குழுவின் பதவிக்காலம் நிறைவடைந்ததால், புதிய நிர்வாகக் குழுவை தேர்ந்தெடுக்கும் பொருட்டு, முதல்நிலையில் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு 4 கட்டங்களாக தேர்தல் நடைபெற்றது.

இருப்பினும் 2018 மற்றும் அதற்கு பின்னர் பதிவாளர் அவர்களால் நியமிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக குழுவின் பதவிக் காலம் காலாவதியாகும் புதிதாக உருவாக்கப்பட்ட / புதுப்பிக்கப்பட்ட சங்கங்களுக்கு நிர்வாகக்குழு தேர்தல் நடத்த தமிழ்நாடு கூட்டுறவு சங்க தேர்தல் ஆணையத்திடமிருந்து தேர்தல் திட்டம் பெற நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் தகுதியான வாக்காளர்கள் இல்லாத காரணத்தினாலும் வேறு சில நிர்வாக காரணங்களால் செயல் ஆட்சியர் நியமனம் செய்யப்பட்ட பால் கூட்டுறவு சங்கங்களுக்கும் உரிய காலத்திற்குள் நிர்வாகக்குழு தேர்தல் நடத்திட தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இரண்டாம் நிலையில், 25 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கான தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதில் மதுரை மாவட்ட



கூட்டுறவு ஒன்றியம் நீங்கலாக மீதமுள்ள 24 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு புதிய நிர்வாகக் குழு தேர்தெடுக்கப்பட்டு பெறுப்பேற்றுக் கொண்டுள்ளது. மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் தேர்தல் வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ள காரணத்தால், தேர்தல் நடத்தி முடிக்க இயலவில்லை.

நிலுவையில் உள்ள நீதிமன்ற வழக்குகள் முடிவடைந்த பிறகு நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் தமிழ்நாடு கூட்டுறவு சங்க தேர்தல் ஆணையத்திடம் கலந்தாலோசித்து தேர்தல் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மூன்றாம் நிலையில், தலைமைச்சங்கமான, தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்திற்கான நிர்வாகக் குழு தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் பணிகள் ஜனவரி–2019ல் துவங்கப்பட்ட போதிலும், நீதிமன்ற உத்தரவின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டது. இந்நிலையில், நீதிமன்ற வழக்கு

முடிவடைந்த நிலையில் இணையத்திற்கான தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், கொரோனா நோய் தொற்று பரவல் ஊரடங்கு காரணமாக தேர்தல் நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. நிலுவையில் உள்ள மதுரை மாவட்ட ஒன்றியத்திற்கான தேர்தல் நடத்தி முடிக்கப்பட்ட பின்னர், தமிழ்நாடு கூட்டுறவு சங்க தேர்தல் ஆணையத்திடம் கலந்தாலோசித்து தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்திற்கான நிர்வாகக்குழு தேர்தலை நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**18. முன்னேற்ற நடவடிக்கைகள்**

- பசுந்தீவனம், கால்நடை தீவனம், தாது உப்புக்கலவை போன்ற உள்ளீடுகளை மானிய விலையில் வழங்கி, கால்நடை பராமரிப்பு செலவினத்தை குறைப்பதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும் இலக்கை அடைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



- பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் பாலினை முழுவதுமாக கொள்முதல் செய்ய பால்பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.
- நிர்வாக செலவுகள் மற்றும் நடைமுறை செலவுகளை குறைத்து இலாபத்தை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தற்போதுள்ள இயந்திரங்களை நவீனமயமாக்கி அவற்றின் செயல்திறனை அதிகரிப்பதன் மூலமும், பால் பண்ணைகளின் கையாளும் திறனை முழுமையாக உபயோகப்படுத்துவதன் மூலமும் செலவினங்கள் குறைக்கப்படும்.
- பால் பொருட்களின் காலக்கெடு காலத்தினை அதிகரிக்க நவீன தொழில்நுட்ப முறைகள் செயல்படுத்தப்படும்.
- பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் இல்லாத மற்றும் சாத்தியக் கூறுகள் உள்ள பகுதிகளில் புதிதாக தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களை அமைத்து அதிக பால் உற்பத்தியாளர்களை

கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- வெளிநாடுகளில் ஆவின் டெட்ரா பால் மற்றும் பால் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்படும்.
- பொது மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பேருந்து நிலையங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு அலுவலகங்களில் ஆவின் பால் மற்றும் பால் பொருட்களின் விற்பனையை அதிகரிக்க கவர்ந்திழுக்கும் கருத்திற்கினிய விளம்பரங்கள் செய்யவும், ஆவின் பாலகங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- பால் உற்பத்தியாளர்களுக்கு கலப்படமற்ற சுத்தமான பால் உற்பத்தி செய்வது குறித்தான விழிப்புணர்வு பயிற்சிகள் அளிப்பதன் மூலம் கிராம அளவிலேயே



தரமான பால் உற்பத்தி அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- உற்பத்தி செய்யப்படும் அதிகப்படியான தீவனங்களை வறட்சி காலங்களில் பயன்படுத்துவதற்காக சேமித்து வைக்க தீவன வங்கிகள் உருவாக்கப்படும். இதற்காக, விவசாயிகளின் நிலத்தில் தீவனம் பயிரிட தேவையான தீவன விதைகள் மற்றும் நீர்ப்பாசன வசதிகள் வழங்க ஏற்பாடு செய்து தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 19. நிதி ஒதுக்கீடு

பால்வளத்துறைக்கான 2021-22 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு கணக்கில் ரூ.47.55 கோடி நிதி ஒதுக்கீடு வருவாய் செலவினமாக வழங்கப்பட்டது. ரூ.2,000 மூலதன செலவினமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது 2021-22 ஆம் ஆண்டிற்கான திருத்தியமைக்கப்பட்ட வரவு செலவு கணக்கில்

ரூ.44.38 கோடி நிதி ஒதுக்கீடு வருவாய் செலவினமாக வழங்கப்பட்டது.

2022-23 ஆம் நிதியாண்டில் பால்வளத்துறையில் முதற்கட்டமாக சோதனை அடிப்படையில் டாப் டவுன் பட்ஜெட் முறை (Top down Budget) நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

## 20. முடிவுரை

பால்வளத்துறை, பால் உற்பத்தியாளர்கள்/ விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும் நோக்கத்தை அடைவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. அதனை செயல்படுத்தும் நோக்கத்துடன் பல்வேறு திட்டங்கள் மற்றும் உத்திகள் செயல்படுத்துவதற்கான நிலைகளில் பரிசீலனையில் உள்ளன.

**சா.மு. நாசர்**


மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்





## பால் கூட்டுறவுகள் குறித்த ஒரு பார்வை


| வ. எண். | பொருள் | விவரம் (31/03/2022 வரை) |
|---|---|---|
| 1 | பால் கூட்டுறவு சங்கங்களின் மொத்த எண்ணிக்கை | 10,540 |
| 2 | 2021-22ம் ஆண்டில் துவங்கப்பட்ட பால் கூட்டுறவு சங்கங்கள் (எண்ணில்) | 253 |
| 3 | 2021-22ம் ஆண்டில் புத்துயிரூட்டப்பட்ட நலிவடைந்த சங்கங்கள் (எண்ணில்) | 92 |
| 4 | தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த உறுப்பினர்கள் (இலட்சத்தில்) | 19.65 |
| 5 | பால் வழங்கும் உறுப்பினர்கள் (இலட்சத்தில்) | 4.18 |
| 6 | சங்கங்களில் பால் கொள்முதல் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 38.26 |
| 7 | மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் எண்ணிக்கை | 25 |
| 8 | மாநில அளவிலான இணையம் | 1 |
| 9 | ஒன்றியங்களில் பால் கொள்முதல் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 34.60 |
| 10 | சென்னை மாநகரில் பால் விற்பனை (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 13.36 |
| 11 | மாவட்ட ஒன்றியங்களில் பால் விற்பனை (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 13.05 |
| 12 | ஒன்றிய பால்பண்ணைகளின் எண்ணிக்கை | 18 |
| 13 | இணையத்தின் பால்பண்ணைகள் எண்ணிக்கை | 5 |


| வ. எண். | பொருள் | விவரம் (31/03/2022 வரை) |
|---|---|---|
| 14 | ஒன்றியங்களின் பால்பண்ணைகள் கையாளும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 30.13 |
| 15 | இணையத்தின் பால்பண்ணைகள் கையாளும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 18.65 |
| 16 | பால் குளிரூட்டும் நிலையங்களின் எண்ணிக்கை | 34 |
| 17 | குளிரூட்டும் நிலையங்களின் கையாளும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 14.55 |
| 18 | மொத்த பால் குளிர்விப்பான்கள் எண்ணிக்கை | 626 |
| 19 | மொத்த பால் குளிர்விப்பான்கள் குளிர்விக்கும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 21.95 |
| 20 | மாவட்ட ஒன்றிய அளவிலான பால் விநியோக வழித்தடங்கள் எண்ணிக்கை | 403 |
| 21 | சென்னை மாநகர பால் விநியோக வழித்தடங்கள் எண்ணிக்கை | 198 |
| 22 | பால் பவுடர் பண்ணைகளின் எண்ணிக்கை (ஈரோடு, சேலம், மதுரை, கிருஷ்ணகிரி மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் இணையம்) | 5 |
| 23 | பால்பவுடர் உற்பத்தித்திறன் (மெ.டன்/நாள்) | 90 |
| 24 | வெண்ணெய் சேமிக்கும் திறன் (மெ.டன்) | 4,629 |
| 25 | பால் பவுடர் சேமிக்கும் திறன் (மெ.டன்) | 7,805 |
| 26 | வெண்ணெய் இருப்பு (மெ.டன்) | 698.80 |
| 27 | பால் பவுடர் இருப்பு (மெ.டன்) | 4,493.73 |



ஒன்றியங்களின் பால் கொள்முதல்
(சராசரி நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்)
28.97
29.46
33.23
32.96
35.90
34.60
2016-17
2017-18
2018-19
2019-20
2020-21
2021-22


சென்னை மாநகர ஆவின் பால் விற்பனை
(சராசரி நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்)
2021 - 22
13.36
2020 - 21
12.63
2019 - 20
12.11
2018 - 19
12.16


மாவட்ட ஒன்றியங்களில் ஆவின் பால் விற்பனை
(சராசரி நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்)
10.58
10.97
11.67
13.05
2018-19
2019-20
2020-21
2021-22



விற்பனை வருவாய்
(இணையம் மற்றும் ஒன்றியங்கள்)
(ரூ கோடியில்)
9000
8000
7000
6000
5000
4000
3000
2000
1000
0
3881
5139
5281
5478
5994
6947
7595
7887
2014-15
2015-16
2016-17
2017-18
2018-19
2019-20
2020-21
2021-22


இணையத்தின் விற்பனை வருவாய்
(ரூ கோடியில்)
3000
2500
2000
1500
1000
500
0
1681
1752
1860
2018
2184
2325
2439
2015-16
2016-17
2017-18
2018-19
2019-20
2020-21
2021-22


மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் விற்பனை வருவாய்
(ரூ கோடியில்)
6000
5000
4000
3000
2000
1000
0
3458
3529
3618
3976
4763
5270
5448
2015-16
2016-17
2017-18
2018-19
2019-20
2020-21
2021-22




**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஐந்து வகையான புதிய ஆவின் பால் பொருட்களை 19.01.2022 அன்று அறிமுகப்படுத்தினார்கள்**




**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கிருஷ்ணகிரி ஒன்றியத்தின் புதிய தாது உப்புக் கலவை ஆலையினையும், ஈரோடு ஒன்றியத்தின் விரிவுபடுத்தப்பட்ட கால்நடைத் தீவன உற்பத்தி ஆலையினையும் 19.01.2022 அன்று துவக்கி வைத்தார்கள்**




**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மதுரையில் புதியதாக அமைக்கப்பட்ட ஐஸ்கிரீம் தொழிற்சாலையை 14.03.2022 அன்று துவக்கி வைத்தார்கள்**



**மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்கள் சிவகங்கை பால்பண்ணையை 24.01.2022 அன்று ஆய்வு செய்தார்கள்**




மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்கள்
14.03.2022 அன்று நந்தனம் ஆவின் இல்லத்தில்
துறை தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடத்தினார்கள்



மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்கள் 20.03.2022 அன்று ஆவடியில் புதிய பாலகத்தினை துவக்கி வைத்தார்கள்



மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் 24.01.22 அன்று சிவகங்கை மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் கடன் உதவிகளை வழங்கினார்கள்



மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் ஈரோடு கால்நடை தீவன உற்பத்தி ஆலையினை 08.01.22 அன்று ஆய்வு மேற்கொண்டார்கள்



திருநெல்வேலி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் குறை தீர்க்கும் கூட்டம்



களவெளி செயல்திறன் பதிவுத் திட்டத்திற்கான சிறந்த பசுவினை தேர்வு செய்ய பால் உற்பத்தியினை அளவீடு செய்தல்
(தருமபுரி ஒன்றியம்)




பாரம்பரியம் நிரூபிக்கப்பட்ட ஜெர்சி காளை, உதகமண்டலம்





கால்நடைத் தீவன உற்பத்தி ஆலை, ஈரோடு
(நாளொன்றுக்கு 300 மெட்ரிக் டன்)




பால் பவுடர் தொழிற்சாலை, திருவண்ணாமலை




19.01.2022 அன்று அறிமுகப்படுத்தப்பட்ட ஆவின்
புதிய பால் பொருட்கள்




அதிவெப்பநிலையில் பாலை பதப்படுத்தும் ஆலை, சேலம்







ஏற்றுமதி செய்யப்படும் அதிவெப்பநிலை பால் மற்றும் நறுமணப்பால்